உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நெஞ்சு விடு தூது



CSS

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க!

ஸ்ரீ மத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

அருளிச் செய்த

நெஞ்சு விடு தூது

திருவாவடுதுறை ஆதீனம்
சீர் - வளர் - சீர்
குரு மகா சன்னிதானம்
அவர்கள் வாழ்த்தி வழங்கி
....
- 5 MAR 2003

பதவுரை

சித்தாந்த பண்டித பூஷணம்

சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள்,

சங்கரன்கோவில்.

நூல் வெளியீடு

நாள் : 13.11.2002

'சைவ சித்தாந்த நன்மணி'
வித்வான் ச. இரத்நவேலன் அவர்களின்
முதலாட்டைத் திதி நினைவாக

குடும்பத்தினர்,
1, ராமசாமியாபுரம் 6 ஆம் தெரு, சங்கரன்கோவில்.

உ

திருச்சிற்றம்பலம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சமர்ப்பணம்

என்றும் எங்கள் இதய தெய்வம் சைவ சித்தாந்த நன்மணி, சைவ சித்தாந்தப் பேரொளி வித்துவான் சிவஸ்ரீ. ச. இரத்நவேலன் அவர்களுக்குச்

சமர்ப்பணம்

முன்னுரை

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின். - திருக்குறள்.

சைவமக்களுக்குப் பிரமாண நூல்கள் நான்கு வேதங்கள், 28 சிவாகமங்கள், 14 சித்தாந்த சாத்திரங்கள், 12 திருமுறைகளும் முக்கியமாகக் கூறப்படும். இதில் வேதங்களும், சிவாகமங்களும் சமஸ்கிருதத்தில் உள்ளன. சாத்திரங்களும், திருமுறைகளும் தமிழில் செய்யப்பட்டன.

எம்பெருமானின் பெருமைகளேயும் உயிரின் இயல்பினேயும் தெளிவாக எடுத்துக் கூறி அவன் தாள் அடைந்து கொன்றைமாலே சூட்டிட கோரும் ஸ்ரீஉமாபதி சிவாச்சாரியர் அருளிய அருமையான சாத்திரம் “நெஞ்சு விடு தூது” சிவஸ்ரீ ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளே உரை செய்த அந்நூலினே சிவப்பேறு எய்திட்ட ஆசிரியர் அவர்களின் முதலாம் ஆண்டு திதி விழாவில் வெளியிடுவதை மிகப் பொருத்தமாக அமையும் எனக் கருதுகிருேம்.

ஆசிரியர் அவர்கள் 13.6.1935ம் ஆண்டு சங்கரன்கோவில் சணமுகம் செட்டியார் - முத்துராக்கம்மாள் இவர்களுக்கு ஆண் மகவாக அவதாரம் செய்தார்கள். இவர்களுக்கு 5 சகோதரிகள், ஒரு சகோதரர் உடன் பிறந்தார்கள். இவரது தந்தையார் ஒரு கடையில் கணக்கராக வேலே பார்த்து வந்தனர். விளேயும் பயிர் முளேயிலே தெரியும் என்பது போல ஆசிரியர் அவர்கள் ஆரம்பக் கல்வியை ஸ்ரீஇராமச்சந்திரா வித்யாலயத்திலும், உயர்கல்வியை அரசு உயர்நிலைப்பள்ளியிலும் முதல் மாணவராகப் பயின்றனர். திருநெல்வேலி பேட்டையில் ஆசிரியர் பயிற்சி முடித்தனர். 1958ல் வடக்கு ரதவீதி ஆரம்பப் பள்ளியில் ஆசிரியப் பணியில் சேர்ந்தனர். பச்சபெருமாள்பட்டி, S.N.R. பள்ளி, காயாமொழி ஆகிய இடங்களில் பணிபுரிந்தனர். இடையே தமிழ் வித்துவான் கல்வியை அஞ்சல்வழிக் கல்வி மூலம் முடித்தனர். பின்னர் தமிழ் வித்துவானுக கரிவலம்வந்தநல்லூர், திருவேங்கடம் ஆகிய இடங்களில் பணிபுரிந்து இறுதியாக 1993ல் ஒய்வு பெறும் வரை சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்பாள் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்தனர்.

இவர்களது தந்தையார் இளம் வயதிலேயே காலமானதால், சகோதரிகள், சகோதரரைப் பராமரிக்கும் பொறுப்பும், திருமணம் செய்து வைக்கும் பொறுப்பும் இவர்களேச் சேர்ந்தது. பொறுமையின் சிகரம் எது என்ருல் ஆசிரியரைப் பார்த்தால் விளங்கும். எத்தகைய கஷ்டம் வரினும் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டு சாதாரணமாகக் காட்சியளிக்க எப்படி

முடிகின்றது என்று அவர்களைக் கேட்டால் "பிராரத்தகன்ம வினை" பற்றி ஒரு சொற்பொழிவு செய்துவிடுவார்கள். படித்த சாத்திரக் கல்வியைப் பூரணமாகத் தன் வாழ்வில் அவர்கள் நடத்திக் காட்டி நமக்கெல்லாம் உதாரண புருஷராக அவர்கள் விளங்கினுர்கள் என்றுல் அது மிகையாகாது.

பொறுமையின் சிகரமான ஆசிரியர் தனது 37 வது வயதில் 10.12.1972ல் இளம்புவனத்து மாரியப்பன் செட்டியார் - கோமதி அம்மாள் இவர்கள் புதல்வி தனலட்சுமி அம்மையைத் திருமணம் செய்தனர். இவர்களது மூன்று ஆண்மக்களும் மூன்று பெண்களும் இவர்களது இல்வாழ்க்கைச் செல்வங்கள்.

பள்ளிப் பருவத்திலிருந்தே சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்ட ஆசிரியர் சங்கரன்கோவிலில் 1952ம் ஆண்டு சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்களால் சைவ சித்தாந்த சபை தோற்றப்பட்ட காலம் முதல், முதல் மாணவனுகச் சைவம் பயின்றனர். சிறு வயதிலேயே ஆங்காங்கே சைவச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தனர்.

தமது ஆசிரியர் ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்களை இறுதிக்காலத்தில் பெரும்பாலும் பராமரித்த பெருமை இவர்களையே சாரும். வடமொழியிலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்ற சிவஸ்ரீ. ஈசுரமூர்த்தியா பிள்ளை அவர்களிடம் சைவத்தை குருகுலக் கல்வியாகவே ஆசிரியர் அவர்கள் பயின்றனர்.

1966ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சங்கரன்கோவில், திருநெல்வேலி, கோவில்பட்டி, விக்கிரமசிங்கபுரம், கழுகுமலை ஆகிய இடங்களில் சாத்திரங்களையும், புராணங்களையும் தொடர்ந்து பயிற்றுவித்து வந்தார்கள். குறிப்பாக திருநெல்வேலியில் 14 சாத்திரங்களையும் முறையாகப் பாடம் நடத்தி முடித்துள்ளனர்.

ஆடம்பரம் இல்லாத எளிய வாழ்க்கை ஆசிரியருடையது. இவர்களது புலமையினுல் பெரும்பணமும் மிகுந்த செல்வங்களும் ஈட்டியிருக்கலாம். ஆனுல் ஆசிரியர் அவர்கள் "ஆன்ம லாபம்" ஒன்றே செல்வம் எனக் கருதினுர்கள். பிரதி பலன் கருதாது அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த பேருபகாரம் "இறைவனும், மழையும்" போன்ற கருணையும் அன்பும் தவிர வேறல்ல.

இவர்களது புலமையைக் கண்ட திருவாவடுதுறை 23 வது சந்நிதானம் இவர்களை ஆதீனப் பிரச்சாரகராக நியமித்தனர். சங்கரன்கோவில் அறுபத்து மூவர் குருபூஜைக் குழு மற்றும் இந்து சமயப் பேரவையில் இவர்களுக்கு "சைவ சித்தாந்தப் பேரொளி" என்ற பட்டம்

வழங்கப்பட்டது. 1984ல் திருவாவடுதுறையாதீனம் அவர்கள் இவர்களது பவித்திரமான சொற்பொழிவைக் கேட்டு "பவித்திர மோதிரம்" ஒன்றைப் பரிசளித்தார்கள். பின்னர் இவர்களுக்கு "சைவ சித்தாந்த நன்மணி" என்றும் பாராட்டுப் பத்திரம் வழங்கினுர்கள்.

ஆசிரியர் அவர்கள் "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கோட்பாடு உடையவர்கள். கோவில்பட்டி, சங்கரன்கோவில், விக்கிரமசிங்கபுரம் மற்றும் தனது மாணவர்களை ஸ்தல யாத்திரையில் ஈடுபடுத்தி 12 ஜோதிர் லிங்கங்கள் மற்றும் தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும் எண்ணற்ற சிவாலய தரிசனங்களை தரிசிப்பித்தார்கள். சங்கரன்கோவிலில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக சிவராத்திரிதோறும் பஞ்சஸ்தல யாத்திரை நடத்தி அக்கோவில்களில் எல்லாம் சிறப்பான அனைத்து அபிஷேகங்களையும் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். ஆசிரியரைத் தொடர்ந்து அப்பணி இன்றளவும் நடைபெற்று வருகிறது.

சைவ உலகம் உய்ய ஆசிரியர் அவர்கள் பல அரிய நூல்களையும் செய்தார்கள். அவற்றில் சில "சிவாலய மாத விழாக்கள், நித்திய (ஆறுகால) பூஜை, இருது சங்கமநம், பெரிய புராணத்து மன்னர்கள், மூன்று உபதேசங்கள் என்ற நான்கு உரைநடை சமயாசாரிய, சந்தனுச் சாரியார்கள் வரலாறு போன்ற பல.

சைவ சித்தாந்த சபையின் 20க்கும் மேற்பட்ட வெளியீடுகளுக்கும் ஆசிரியர் ஒரு முக்கிய காரணமாக இருந்தவர்கள்.

புதிய நூல்கள் பல செய்யும் ஆற்றல் மிக உண்டு ஆசிரியருக்கு. ஆனுல், நமது ஆச்சாரியன்மார்கள் செய்த நூல்களைப் பேணிப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும் என்பதே அவர்கள் கோட்பாடு" சைவ உலகத்தில் ஆசிரியரை அறியாத, பாராட்டாத பெரியவர்கள் இல்லை என்றே கூறலாம்.

சைவ சமய வளர்ச்சிக்கே தன் வாழ்நாள் முழுதும் அர்ப்பணித்து சைவமே உயிர்மூச்சு என்ற ஆசிரியப் பெருந்தகை எல்லோரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு 26.10.2001 அன்று சிவப்பேறு எய்தினுர்கள்.

ஆசிரியர் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் சைவ சித்தாந்த சபையில் தொடர் சொற்பொழிவாக திருத்தணிகை புராணமும், சாத்திரப் பாடமாக சிவஞான சித்தியாரும் நடத்திவந்தார்கள். தவிரவும் சாத்திரம் பயின்ற மாணவர்கள் பலரை உருவாக்கிடவேண்டும் என்ற உறுதிகொண்டு எனது இல்லத்தில் வைத்து "திருவருட்பயன்" சாத்திரத்தை 6.6.2001 முதல் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்றுவது போல்

பயிற்றி வந்தார்கள். பாடங்களில் தேர்வு நடத்தினார்கள். சிவபதம் அடைவதற்கு முதல் நாள் இறுதி வகுப்பாக "இன்புறு நிலை" என்ற அதிகாரத்தில்

"தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ யேகமெனக் கொள்"

என்ற பாடலை நடத்தினார்கள். இப்பாடல் உயிர் இறைவனிடம் அத்துவிதமாக் கலந்து இன்புறும் நிலையைக் கூறுகிறது. அதேபோல் மறுநாள் ஆசிரியர் அவர்கள் இறைவன் திருவடியில் அத்துவிதமாகக் கலந்துவிட்டார்கள். இது ஆசிரியர் முன்கண்ட பாடலை யோக நிலையில் நடத்தினார்கள் என்பதைத் தெளிவு செய்கிறது. ஆசிரியர் தனது குருமூர்த்தி சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள், சாத்திரங்களுக்கு எழுதிய பதவுரையை அடிப்படையாகக் கொண்டே நடத்தினார்கள். தற்போதும் அவ்வாறே நடந்து வருகிறது.

ஆசிரியர் அவர்கள் மேற்கண்ட பாடலை நடத்திய அதே நாளில் என்னிடம் "நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீ தொடர்ந்து சாத்திரப் பாடங்களை நடத்தவேண்டும். அதில் எவ்விதத் தொய்வும் இருக்கக்கூடாது" என ஆணையிட்டனர். இதுவும் திருவருள் செயல் போலும். அதே போல் தொடர்ந்து திருவருட்பயன் பாடம் நிறைவு செய்து, உண்மை விளக்கம் நடத்தி, அடியேன் சிவப் பிரகாசம் தற்போது நடத்திவர அடியேன் உள்ளத்துள் புகுந்து ஆசிரியர் அருள் செய்வதை அடியேன் பூரணமாக உணர்கிறேன். மாணவர்களும் கூட தற்போது மிகுந்த உத்வேகத்துடன் சாத்திரம் பயிலுகின்றனர். ஒரு உடலில் இருந்த ஆன்மா இறைவன் திருவருள் வெள்ளத்தில் கலந்தபின் வியாபகமாகி வியாபக அறிவைப் பெறும் என்ற சாத்திர உண்மைக்கு இது ஒரு நிருபணம் என்றே கருதுகிறேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்" என்ற அவர்களது கொள்கை வழிநின்று சைவம் வளர்ப்பதே நாம் அவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

ஆசிரியர் பணியில் என்றும்,
இரா. ஆவுடையப்பன்,
செயலர்,
சைவ சித்தாந்த சபை,
சங்கரன்கோவில்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க!

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சார் உமாபதி தேசிகன் செஞ்சரணும் புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே.

- *சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள்.*

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க!

நெஞ்சு விடு தூது

(மூலம்)

கலிவெண்பா

பூமேவும் உந்திப் புயல்வண்ணன் பொற்பதுமத்
தார்மேவும் மார்பன் சதுர்முகத்தோன் - தாம் மேவிப்
பன்றியு மன்னமுமாய் பாரிடந்தும் வான்பறந்தும்

பதவுரை

பூமேவும்	-	தாமரைப்பூப் பொருந்திய
உந்தி	-	நாபியையும்
புயல்	-	மேகத்தின்
வண்ணன்	-	நிறத்தையும் உடைய திருமால்
பொன் பதுமம்	-	பொற்றுமரையாலாகிய
தார்	-	மாலை
மேவும்	-	பொருந்திய
மார்பன்	-	மார்பையுடையவனுகிய
சதுர் முகத்தோன்	-	நான்கு முகத்தையுடையவனுகிய பிரமன்
தாம்	-	என்ற இருவரும்
பன்றியும் அன்னமுமாய்	-	முறையே பன்றியும் அன்னமுமாக
மேவி	-	வடிவெடுத்து
பார் இடந்தும்	-	பூமியைக் குடைந்து கீழ்ச் சென்றும்
வான் பறந்தும்	-	வானிற் பறந்து மேற்சென்றும்

என்றும் அறியா இயல்பினன் - அன்றியும்
இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்
மந்தர வெற்பும் மறிகடலும் - மந்திரமும்
வேதமும் வேத முடிவின்விளை விந்துவுடன்
நாதமுங் காணு நலத்தினன் - ஓத

என்றும்	-	எக்காலத்திலும்
அறியா	-	காணமாட்டாத
(திருவடி திருமுடிகளை)		
இயல்பினன்	-	இயல்பாகவுடையவன்;
அன்றியும்	-	மேலும்
இந்திரனும்	-	இந்திரனும்
வானோரும்	-	தேவர்களும்
ஏனோரும்	-	அத்தேவர்க ளுலகிற்கு மேலுள்ள உலகங்களிலுள்ளவர்களும்
எ புவியும்	-	கீழுள்ள எல்லா வுலகங்களிலுள்ளவர்களும்
மந்தர வெற்பும்	-	மந்தர முதலிய மலைகளின் தலைவர்களும்
மறிகடலும்	-	ஆரவாரிக்கிற சமுத்திரங்களின் மன்னர்களும்
மந்திரமும்	-	சப்தகோடி மந்திர மூர்த்திகளும்
வேதமும்	-	வேத புருஷனும்
வேத முடிவின்	-	வேதாந்த ஞானத்தால்
விளை	-	கைவந்த
விந்துவுடன்	-	விந்து தத்துவ புவன வாசிகளோடு
நாதமும்	-	நாத தத்துவ புவன வாசிகளும்
காணு	-	அறிய மாட்டாத அதீத நிலையை
நலத்தினன்	-	இயல்பாக வுடையவன்;
ஓத	-	(யாரும்) சொல்லிக் காட்ட

அரியான் எளியான் அளவிறந்து நின்ற
பெரியான் சிறியான்பெண் பாகன் - தெரியா (5)
அருவான் உருவான் அருவுருவ னல்லான்

அரியான்	-	முடியாத பெருமையை இயல்பாக வுடையவன்;
எளியான்	-	(அநுபூதியில் மாத்திரம் பிரசன்னமாகக் கூடிய) சௌலப்பியத்தை இயல்பாகவுடையவன்;
அளவு	-	அளவை நூலுக்கு
இறந்து நின்ற	-	அகப்படாத
பெரியான்	-	பெருமையை இயல்பாக வுடையவன்;
சிறியான்	-	உயிருக்கு உயிராயிருப்பதை இயல்பாக வுடையவன்;
பெண்	-	(சர்வான்மாக்கள் மேலும் வைத்த) அபார காருண்யத்தை
பாகன்	-	தன்னிடத்தில் இயல்பாக வுடையவன்;
தெரியா	-	புலப்படாத
அருவான்	-	சிவம் சத்தி நாதம் விந்து என்ற நான்கு அருவத் திருமேனிகளை இயல்பாக வுடையவன்;
உருவான்	-	மகேசன், உருத்திரன், மால், பிரமன் என்ற நான்கு உருவத்திருமேனிகளை இயல்பாக வுடையவன்;
அருவுருவன்	-	சதாசிவன் என்ற ஓரருவத் திருமேனியை இயல்பாக வுடையவன்;
அல்லான்	-	அம்மூவகைத் திருமேனிகளையும் தான் கொள்ளாதிருத்தலையும் இயல்பாகவுடையவன்;

மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான
மெய்யர்க்கு மெய்யன் வினைக்குவினை யாயினுன்
பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினுன் - ஐயன்
படநாகம் பூண்ட பரமன் பசுவி
னிடமாய் நிறைந்த இறைவன் - சுடரொளியான்

மரியான்	-	தனக்கென ஒன்றையும் நினையாதிருத்தலை இயல்பாக வுடையவன்;
மரிப்பார்	-	தன்னை நினைப்பாரது
மனத்தான்	-	உள்ளத்தில் இருத்தலை இயல்பாக வுடையவன்;
பரிவு ஆன	-	தன்பால் அன்பு மீதூரப் பெற்ற
மெய்யர்க்கு	-	உண்மை ஞானிகளுக்கு
மெய்யன்	-	புலப்பட்டு நிற்றலை இயல்பாக வுடையவன்;
வினைக்கு	-	சரியை கிரியை யோகங்களுக்கு
வினை ஆயினுன்	-	உடனாதலை இயல்பாக வுடையவன்;
பொய்யர்க்கு	-	அந்நெறிகளில் வாராத பிராகிருதருக்கு
பொய் ஆய	-	இல்லாதவன் போலும்
பொய்யினுன்	-	புலப்படாமையை இயல்பாக வுடையவன்;
ஐயன்	-	முழு முதன்மையை இயல்பாக வுடையவன்;
படநாகம்	-	படத்தையுடைய பாம்பை
பூண்ட	-	(ஆபரணமாக) அணிந்த
பரமன்	-	உயர்வை இயல்பாக வுடையவன்;
பசுவின் இடமாய்	-	உயிர்களிடத்தில்
நிறைந்த	-	நிறைந்துள்ள
இறைவன்	-	கருத்தாவாதலை இயல்பாக வுடையவன்;
சுடர்	-	சூரியன் சந்திரன் அக்கினி ஆகியவற்றுக்கு
ஒளியான்	-	ஒளி கொடுத்து வருதலை இயல்பாக வுடையவன்;

என்றுமுளன் அன்றளவும் யானும் உளனுகி
நின்றநிலை யிற்றரித்து நில்லாமல் - சென்று சென்று
தோற்றியிடு மண்டஞ் சுவேதசங்கற் பாரின்மேற்
சாற்றும்உற் பீசஞ் சராயுசங்கட் - கேற்றபிறப்
பெல்லாம் பிறந்து மிறந்து மிருவினையின்

என்றும் உளன் - ஆதி அந்தம் இல்லாமையை இயல்பாகவுடையவன்.
அன்றளவு - அந்நித்தத் தன்மையில்
யானும் - நானும் (உயிரும்)
உளன் - இருக்கிறேன்.
ஆகி (உம்) - (அப்படி) இருந்தாலும்
(அவன் அசைவற)
நின்ற நிலையில் - நின்ற நிலை போல
(நான்)
தரித்து நில்லாமல் - நிச்சலமாய் நில்லாமல்
சென்று சென்று - விகாரப்பட்டு

(*'தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள் பாரின்மேல் சாற்றும்'* என்றதைச் *'சாற்றும் பாரின்மேல் தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள்'* என மாறுக.)

சாற்றும் - இப்பிரசித்த
பாரின்மேல் - உலகில்
தோற்றியிடும் - படைக்கப்பட்டுள்ள
அண்டம் (ஜம்) - முட்டை
சுவேதசங்கள் - வேர்வை
உற்பீசம் - விதை
சராயுசங்கட்கு - கரு என்ற நால்வகைத் தோற்றங்களுக்கு (உட்பட்ட ஏழுவகைப் பிறப்புக்களில்)
ஏற்ற - (எனக்குத்) தகுந்த
பிறப்பு எல்லாம் - எல்லாப் பிறப்புக்களிலும்
பிறந்தும் - பிறந்தும்
இறந்தும் - செத்தும்
இருவினையின் - நல்வினை தீவினைகளின்

பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன்- கல்லா
உணர்வின் மிசையோ டுலகா யதனைப்
புணர்வதொரு புல்லறிவு பூண்டு - கணையிற்
கொடிதெனவே சென்று குடிப்பழியே செய்து
கடிய கொலைகளவு காமம் - படியின்மிசைத்
தேடி யுழன்று தெரிவைத் தெரியாமல்

பொல்லாங்கு	-	துயரங்களை
துய்க்கும்	-	அனுபவித்து வருகிற
பொறியிலியேன்	-	மூடனேன்.
	(அதனுல்)	
கல்லா	-	(நல்ல) நூல்களைப் பயிலாத
உணர்வின் மிசையோடு	-	மந்த வுணர்வின் வசமாகி
உலகாயதனை	-	நாத்திகனை
புணர்வது	-	பற்றிக் கிடத்தலாகிய
ஒரு புல் அறிவு பூண்டு	-	ஓர் அற்ப ஞானத்தைப் பெற்று
கணையில்	-	(வில்லிலிருந்து பாய்கிற) அம்பு போல
கொடிது எனவே	-	மிகப் பாய்ந்து
சென்று	-	(கண்டவிடமெல்லாம்)போய்
குடி	-	கள்ளு(க் குடித்து)
பழி செய்து	-	புறங்கூறி
கடிய	-	பயங்கரமான
கொலை	-	கொலை செய்து
களவு	-	களவாடற்குப் பொருள் களையும்
காமம்	-	காமவெறியைத் தீர்த்துக் கோடற்குப் பெண்களையும்
படியின் மிசை	-	உலகில்
தேடி உழன்று	-	தேடியலைந்து
தெரிவை	-	திருவருளை
தெரியாமல்	-	சிறிதும் நாடாமல்

வாடி யிடையும் மனந்தனக்கும் - நாடி அது
போன வழிபோகும் புந்திக்கும் புந்தியுடன்
ஆன திறலா மகந்தைக்கும் - மேனி *(15)*
அயர வயர வழிய வழியும்
உயிரின் துயர முரையேன் - வயிரமே

வாடி இடையும்	-	வாடி வருந்துகிற
மனந் தனக்கும்	-	மனத்துக்கும்

(நாடியது என்றதை அது நாடி என மாறுக.)

அது	-	அம்மனம்
நாடி போன	-	விரும்பிச் சென்ற
வழியே	-	தீய வழியிலேயே
போகும்	-	சென்றுநிச்சயிக்கிற
புந்திக்கும்	-	புத்திக்கும்
புந்தியுடன்	-	அப்புத்தியோடிருந்து
ஆன	-	(அந்நிச்சியித்தற்கு) வேண்டிய
திறல் ஆம்	-	ஊக்கத்தை உண்டாக்குகிற
அகந்தைக்கும்	-	ஆங்காரத்துக்கும்

(இரையாகி)

மேனி	-	உடம்பு
அயர அயர	-	முதிர்ந்து முதிர்ந்து
அழிய	-	கெடுவதால்
அழியும் உயிரின்	-	கெட்டொழியும் உயிரின்
துயரம்	-	துன்பத்தை
உரையேன்	-	(அளவிட்டுச்) சொல்லமாட்டேன்.
வயிரம்	-	வலிமை

கொண்டதொரு காமனுக்குங் கோபனுக்கும் மோகனுக்கும்
மண்டு மதமாச் சரியனுக்குந் - திண்டிறல் சேர்
இந்திரியம் பத்துக்கு மீரைந்து மாத்திரைக்கு
மந்தமிலாப் பூதங்க ளைந்துக்குஞ் - சிந்தைகவர்

கொண்டதொரு	-	மிக்க
காமனுக்கும்	-	ஆசைக்கும்
கோபனுக்கும்	-	கோபத்துக்கும்
மோகனுக்கும்	-	மயக்கத்துக்கும்
மண்டு	-	நிரம்பிய
மதம்	-	கர்வத்துக்கும்
மாச்சிரியனுக்கும்	-	அடுத்துக் கெடுத்தலுக்கும்
திண் திறல் சேர்	-	மிகுந்த ஆற்றல் படைத்த
இந்திரியம் பத்துக்கும்	-	ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து ஆகப் பத்துக்கும்.

(*'ஈர் ஐந்து மாத்திரைக்கும்'* என்றதை *'மாத்திரை ஈர் ஐந்துக்கும்'* என மாறுக.)

மாத்திரை	-	சப்தம், பரிசம்,ரூபம்,ரசம்,கந்தம் என்ற விடயம் ஐந்து. சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற தன்மாத்திரை ஐந்து ஆகத் தன்மாத்திரை
ஈர் ஐந்துக்கும்	-	பத்துக்கும்
அந்தம் இலா	-	கெடுதலில்லாத
பூதங்கள் ஐந்துக்கும்	-	பூதங்கள் ஐந்துக்கும்
சிந்தை	-	சித்தத்தை
கவர்	-	தன்வழிப் படுத்துகிற

மூன்று குற்றம் மூன்று குணம் மூன்று மலம் மூன்றவத்தை
யேன்று நின்று செய்யு மிருவினைக்குந் - தோன்றுத
வாயுவொரு பத்துக்கும் மாறுத வல்வினையே
யாய கிளைக்கு மருநிதிக்கும் - நேயமா *(20)*
மிச்சை கிரியை யிவைதரித்தங் கெண்ணிலா

மூன்று குற்றம்	-	காமம் வெகுளி மயக்கம், ஆதி தெய்வீகம், ஆதி பௌதிகம், ஆதி யாத்மிகம் என்ற துக்கம் மூன்று;
மூன்று குணம்	-	சாத்விகம், இராசதம், தாமதம் என்ற குணம் மூன்று;
மூன்று மலம்	-	ஆணவம்,கன்மம், மாயை என்ற மலம் மூன்று;
மூன்று அவத்தை	-	கேவலம், சகலம், பிராரத்தம் கழியும் வரையுள்ள சுத்தம் என்ற அவத்தை மூன்று

(ஆகியவற்றை)

ஏன்று நின்று	-	தமதாகக் கொண்டு
செய்யும்	-	நுகர்விக்கும்
இருவினைக்கும்	-	நல்வினை தீவினைகளுக்கும்,
தோன்றுத	-	புலப்படாத
வாயு ஒரு பத்துக்கும்	-	வாயுக்கள் பத்துக்கும்,
மாறுத	-	விட்டுநீங்காத
வல்வினையே ஆய	-	பொல்லாத வினைவயத்தாற் கிடைத்த
கிளைக்கும்	-	உறவினர்களுக்கும்,
அருநிதிக்கும்	-	வருந்தித் தேடிய செல்வத்துக்கும்,
நேயம் ஆம்	-	என்னிற் பிரியாத
இச்சை கிரியை	-	இச்சா சத்தி கிரியாசத்தி
இவை	-	ஆகிய இவ்விரண்டாலும்
தரித்து அங்கு	-	முறையே இச்சித்துப் பாடுபட்டு

(அத்தனையும் கை கூடுதற்கண்)

எண் இலா	-	கணக்கில்லாத

வச்சங் கொடுமை யவைபூண்டு - கச்சரவன்
சீரின்நிலே நில்லாது திண்டாடும் பல்கருவி
வாரிலகப் பட்டு மயங்கினேன் - தேருங்கா
லுன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவை தனியறிவை - முன்னந்

அச்சம் கொடுமை அவை	-	காரியம் கெட்டு விடுமோ என அஞ்சுதல், காரியானு கூலத்தின் பொருட்டுப் பிறரைக் கெடுத்தல் ஆகியவற்றை
பூண்டு	-	செய்து
கச்சு அரவன்	-	கச்சாகப் பாம்பைத் தரித்தவனாகிய சிவனருளிய
சீரின்	-	திவ்யாகமங்களின்
நிலே	-	வரம்புள்
நில்லாது	-	நின்று உய்தி தேடாமல்
திண்டாடும்	-	கலக்கத்துக்கு ஏதுவான
பல் கருவி	-	பல தத்துவங்களாகிய
வாரில்	-	புயலில்
அகப்பட்டு	-	சிக்கி
மயங்கினேன்	-	மருண்டேன்.
தேருங்கால்	-	ஆராயுமிடத்து

(அடியேனுக்கு (உயிர்களுக்கு) துக்க நிவிர்த்தி சுகப் பிராப்தி தந்தருள்வதற்கு)

உன்னை ஒழிய	-	உன்னை (சிவனை)த்தவிர
உறவு	-	கதியாவர்
இல்லை	-	பிறரில்லை
என்னுமது தன்னை	-	என்ற உண்மையை
அறிவை	-	நீ நன்றே அறிவாய்.

(ஆகலின்)

தனி அறிவை	-	அவ்வொப்பற்ற ஞானத்தை

(*'முன்னம் தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்'* என்றதை *'முன்னம் தீரத்துறந்தார் தலைப்பட்டார் மற்றையவர் மயங்கி வலைப்பட்டார்'* என மாறுக)

முன்னம்	-	'முதலில்

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாம - லைவர்க்கு
மாவனவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்

தீர - (உடல் பொருளாதியவற்றின் பாலுள்ள பற்றை) முழுக்க
துறந்தார் - விட்டவரே
(அந்தச் சிவஞானத்தின் வழி முத்தியின்பத்தை)
தலைப்பட்டார் - எய்தியவராவார்;
மற்றையவர் - அங்ஙனந் துறவாதவர்
மயங்கி - பொய்ந் நெறிச் சென்று
வலைப்பட்டார் என்று - பிறப்பு இறப்புக்களிற் சுழல்வார்' என்று
(‘*நிலைத்தமிழின் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்*’ என்றதைத் ‘*தெய்வப் புலமைத் திருவள்ளுவர் நிலைத்தமிழின்*’ என மாறுக.)
தெய்வப்புலமை - சிவஞானம் கைவந்த
திருவள்ளுவர் - திருவள்ளுவதேவர்
நிலைத் தமிழின் - தமது அழியாத திருக்குறளில்
உரைத்த - அருளிச் செய்த
மெய்வைத்த - சத்தியம் நிறைந்த
சொல்லை - குறட்பாவை (யும்)
விரும்பாமல் - ஆராய்ந்து அச்சத்தியத்தைப் பெற ஆசைப்படாமல்
(பொய்ந்நெறிச் சென்று)
ஐவர்க்கும் - பஞ்சேந்திரியங்களுக்கும்
ஆவனவே - வேண்டுவனவற்றையே
செய்து - உழைத்துத் தேடி
அங்கு - அப்படியே
அவர் வழியை - அவற்றின் வசத்தை
தப்பாமல் - மீற மாட்டாமல் (உழன்று)
(அதனால்)

பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப் - பூவையர்தம்
கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்
குண்மை நிலையுணர்ச்சி யோராமல் - திண்மையினால்
நாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பில் தலைப்பட்டிங் - காவிநிலை

பாவம் எனும்	-	வினையின் பயனாகிய
பவ்வம் பரப்பு	-	பிறவிக் கடலில்
அழுந்தி	-	அகப்பட்டு
பூவையர் தம்	-	பெண்களின்
கண் வலையில்	-	காம வலையில்
பட்டு	-	சிக்கி
கலவிக்கலை	-	புணர்ச்சிக் கலையாகிய அமரகம் கொக்கோகம் முதலிய காமசாத்திரங்களில்
பயின்று அங்கு	-	பழகியது போல
உண்மை	-	பதி பசு பாசவுண்மைகளை (உணர்த்தும்)
நிலை உணர்ச்சி	-	வேத சிவாகம ஞானங்களை
ஓராமல்	-	படித்து ஆராய்ந்து அறியாமல்
திண்மையினால்	-	நெகிழ்ச்சியற்ற மனங் காரணமாக
நாவில்	-	நாவினால்
கொடுமை பல	-	சிவநிந்தை முதலிய பல தீங்குகளை
பிதற்றி	-	புலம்பி
நாள்தோறும்	-	ஒவ்வொரு நாளும்
சாவில் பிறப்பில்	-	மரண சநநங்களில்
தலைப்பட்டு	-	சிக்கி
இங்கு	-	இவ்வுலகில்
ஆவி	-	உயிர்
நிலை	-	பரிதாப நிலையில்

நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே
பொற்புடனே யானே புகலக்கேள் - வெற்பின்மிசை
வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணஞ்
செந்தழலின் மூழ்கச் சிரித்தபிரான் - அந்தமிலா *(30)*

நிற்கும் வகை - பட்டுழல்கின்ற விதத்தை

(பாராய் நிலையான நெஞ்சமே என்றதை நிலையான நெஞ்சமே பாராய் என மாறுக)

நிலையான நெஞ்சமே - நிலைபெறுமாறு எண்ண வேண்டிய நெஞ்சமே!

பாராய் - (நீ சிறிதும்) சிந்திக்கிறாயல்லை. அந்தவிதம் உன்னிடத்தில் உறைக்கும்படி

பொற்புடனே - மிகத் தெளிவாக

(அயலாரெவருமன்றி உன்னேடு என்றுந் தொடர்புடைய)

யானே - நானே

புகல - விளக்குவதை

கேள் - நீ கேட்பாயாக.

(ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டு)

வெற்பின் மிசை - கயிலையங்கிரியில்

(உமா சமேதனாய்)

வந்திருக்க வல்லான் - எழுந்தருளியிருக்க வல்லவன்;

மதியாதார் - தேவர் முனிவராதியோரைப் பொருட்படுத்தாத அசுரர்களின்

வல் - (பிறரெவராலும் வெல்லப்படாத) வலிமைமிக்க

அரணம் - திரிபுரங்களையும்

(அவ்வசுரர்களோடு)

செந்தழலின் மூழ்க - தீக்கிரையாகும்படி

சிரித்த - புன்முறுவல் செய்த

பிரான் - பெருமான்;

அந்தம் இலா - அழிவில்லாத

வேத முடிவில் விளவில் விளவிலொளி
ஆதி யமலன் நிமலனருட் - போத
வறிவி லறிவை யறியு மவர்கட்
குறியுட் புகுதுங் குணவன் - நெறிகொள்
வெளியில் வெளியில் வெளியன் வெளியில்

வேத முடிவில்	-	வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களின்
விளவில்	-	செம்பொருளாலும்
விளவில்	-	குறிப்புப் பொருளாலும்
	(சித்திக்கிற)	
ஒளி	-	ஞான சொரூபன்;
ஆதி	-	முதல்வன்;
அமலன்	-	(இயல்பாகவே) ஆணவாந்தகாரத்தில் அகப்படாதவன்;
நிமலன்	-	அதனுல் மாயா கர்மங்களிலும் சிக்காதவன்;
அருட்போத	-	திருவருள் ஞானத்தின் வசமாகிய
அறிவில்	-	தமது உயிரறிவில்
அறிவை	-	அவ்வருளை
அறியும் அவர்கள்	-	தரிசிக்கிறவர்களின்
குறியுள்	-	அறிவில் (அவ்வருள் வழியாக)
புகுதும்	-	விளங்குகின்ற
குணவன்	-	எண் குணமுடையவன்;
நெறிகொள்	-	கீழிலிருந்து மேற்செல்லும் வரிசையிற் கொள்ளப்பட்ட
வெளியில்	-	ஐந்தாவது பூதமாகிய ஆகாயத்திலும்
வெளியில்	-	அதற்கு மேலாகிய பிரகிருதியிலும்
வெளியன்	-	அதற்கு மேலாகிய கலா தத்துவத்திலும் வியாபித்திருப்பவன்;
வெளியில்	-	அதற்கும் அப்பால்

ஒளியில் ஒளியில் ஒளியன் - ஒளியில்
அளியில் அளியில் அளியன் அளியில்
அளவில் அளவில் அளவன் - அளவிறந்து
நின்றா னனைத்து நிறைந்தான் நினைப்பவர்பாற்
சென்றான் தெரியத் தெரியாதான் - குன்றா (35)

ஒளியில்	-	பிரகாசமான அசுத்த மாயையிலும்
ஒளியில்	-	அதற்கும் மேலாகிய பிரகாசமான சுத்தவித்தையிலும்
ஒளியன்	-	அதற்கு மேலாகிய பிரகாசமான ஈசுர தத்துவத்திலும் வியாபித்திருப்பவன்;
ஒளியில்	-	அதற்கு மேலுள்ள பிரகாசத்தில்
அளியில்	-	அநுக்கிரகார்த்தமான சதாசிவ தத்துவத்திலும்
அளியில்	-	அதற்கு மேலான அனுக்கிரக ரூப சத்தி தத்துவத்திலும்
அளியன்	-	அதற்கு மேலான அனுக்கிரக ரூப சிவ தத்துவத்திலும் வியாபித்திருக்கும் கருணாசாலி;
அளியில்	-	அக் கிருபையினால்
அளவில்	-	அம் முப்பத்தாறென்னும் தத்துவத் தளவில்

(வியாபித்திருப்பதோடு)

அளவு இல்	-	அந்த அளவையுங் கடந்த
அளவன்	-	வியாபகன்;
அளவு	-	காண்டல் கருதல் உரையென்னும் அளவைகளுக்கு
இறந்து நின்றான்	-	எட்டாமல் நிற்பவன்;
அனைத்தும்	-	உலகுயிரனைத்திலும்
நிறைந்தான்	-	எள் நெய் போல் நிறைந்து நிற்பவன்
நினைப்பவர் பால்	-	தியானிப்பாரிடம்
சென்றான்	-	தோன்றிப் பிரகாசிப்பவன்;
தெரிய	-	பசு போதத்தால் தரிசிக்க முயன்றால்
தெரியாதான்	-	தரிசிக்கப்படாதான்;
குன்றா விளக்காய்	-	குறையாத தீபமாய்

விளக்காய் நிறைந்த விரிசுடரான் மண்மேல்
துளக்காமல் நின்றபெருஞ் சோதி - உளக்கண்ணுக்
கல்லாது தோன்ரு வமல னகிலமெலா
நில்லாமல் நின்ற நிலேயினான் - சொல் ஆரும்
ஈசன் பெருமை யிருவினேயே னின்றுனக்குப்

நிறைந்த	-	எங்குமாயுள்ள
விரிசுடரான்	-	விரிந்த சோதிமயமானவன்;
மண்மேல்	-	பூமியில்
துளக்காமல்	-	அசையாமல்

(துளங்காமல் என்பது துளக்காமல் என நின்றது)

நின்ற	-	நிலேயான
பெருஞ்சோதி	-	பெரிய சோதியாயிருப்பவன்;
உளக் கண்ணுக்கு	-	திருவருளாகிய கண் கொண்டு
அல்லாது	-	அல்லாமல்
தோன்ரு	-	(புறக்கண்ணுக்குப்) புலப்படாத
அமலன்	-	அநாதி பரிசுத்தன்;
அகிலம் எலாம்	-	சர்வான்மாக்களுக்கும்
நில்லாமல் நின்ற	-	அவையறியாமல் (துணேயாய்) நிற்கின்ற
நிலேயினுன்	-	தன்மையையுடையவன்;
சொல் ஆகும்	-	வேதாகமப் புகழ் நிறைந்த
ஈசன்	-	ஆள்பவன்
பெருமை	-	ஆகியோனுடைய பிரபாவத்தை
இரு வினேயேன்	-	நான்
இன்று	-	இப்போது
உனக்கு	-	(என் நெஞ்சமாகிய) உனக்கு

பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள் - பாசம்
பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற்
குலவி விளங்குகுணக் குன்றேன் - இலகவே
செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங் - கையங்

பேசும் தகைமை எலாம்	-	எடுத்து விளக்கும் தசாங்கங்களையெல்லாம்
பேணிக் கேள்	-	கவனமாகக் கேள்.
பாசம் பலவும்	-	மும்மலமும்
கடந்து	-	தாண்டி
பரிந்து	-	மெய்யன்பு வழி
அருள்சேர் பண்பால்	-	திருவருளில் வசப்பட்ட தன்மையால்

(அத்தகைய ஆன்மாவின் உள்ளத்தில்)

குலவி விளங்கும்	-	விரிந்து பிரகாசிக்கிற
குணக் குன்றேன்	-	**என் குணமாகிய மலையையுடையவன்.**
இலகவே	-	(ஆன்மாக்கள்) தூய்மை பெற
செய்ய	-	மேன்மையான்;
தரும	-	(அவனது குணமாகிய) தரும மென்கிற (சிவபுண்ணியமாகிய)
செழுங்கிரியின் மீது	-	வளமிக்க மலையிலிருந்து
இழிந்து	-	இறங்கி

(பரவ மகிழ்ந்து என்பதை மகிழ்ந்து பரவ என மாறுக)

வையம் மகிழ்ந்து பரவ	-	சான்றோர் மகிழ்ந்து துதிக்கும்படி
எழுந்து	-	புறப்பட்டு
அங்கு	-	வழியிலுள்ள
ஐயம்	-	சந்தேகம் (விபரீதம் முதலியவற்றையும்)

களவுபயங் காமங் கொலைகோபங் காதி
அளவில்வினை யெல்லா மழித்திங் - குளமகிழத்
தொம்மெனவே எங்கும் முழங்கிச் சுருதிபயிற்
செம்மைதரு மாகமங்கள் சேர்ந்தோடி - மும்மலத்தின்
காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரை கடந்தங்

களவு	- களவையும்
பயம்	- அச்சத்தையும்
காமம்	- ஆசையையும்
கொலை	- கொலை செய்யுங் கொடுமையையும்
கோபம்	- கோபத்தையும்
காதி	- அடித்துக் கொண்டும்,
அளவு இல்	- அளவில்லாத
வினை எல்லாம்	- கருமங்களை (துன்பங்களை) யெல்லாம்
அழித்து	- தொலைத்துக் கொண்டும்,
இங்கு	- இப்பரிபக்குவத்தில்
உளம் மகிழ	- உள்ளம் மகிழ்ச்சி யடையும்படி

(*'தொம் எனவே எங்கும்'* என்றதை *'எங்கும் தொம் எனவே'* என மாறுக)

எங்கும்	- எப்பக்கங்களிலும்
தொம் எனவே	- தொம் என்று
முழங்கி	- சப்தித்துக் கொண்டும்,
சுருதி	- வேதமும்

(*'பயில் செம்மைதரும்'* என்றதைச் *'செம்மை பயில் தரும்'* என மாறுக)

செம்மை பயில் தரும்	- சிவம் பிரகாசிக்கிற
ஆகமங்கள்	- சிவாகமமும் என்னும் ஞான நூல்களாக
சேர்ந்து ஓடி	- இயைந்து பாய்ந்தும்,
மும்மலத்தின் காடு	- மும்மலக்காடு
அடங்க	- முழுவதையும்
வேர் பறித்து	- வேரோடு பறித்தும்,
கல்வி	- உலக நூற்கல்வியாகிய
கரை	- கரையை
கடந்து	- உடைத்தெறிந்தும்,

கோடுபல் பூதத் துணர்வழித்து - நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவகற்றி - நையுமியல்
வாக்குப்பா தம்பாணி பாயுருபத் தம்பலவும்
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் - போக்கரிய *(45)*

அங்கு ஓடு - அக்கல்வி பற்றி வருகின்ற
பல் பூதத்து - பஞ்ச பூதங்களின்
உணர்வு - குண வியாபாரங்களை
அழித்து - போக்கியும்,
நீடு புகழ் - மிக்க புகழுடைய
மெய்வாய் கண் மூக்குச் செவியென - மெய்வாய் கண்மூக்கு செவி என்று
பேர் பெற்ற - பெயரையுடைய ஞானேந்திரியங்கள்
ஐவாய - ஐந்தின் வழியினும் வருகிற
வேட்கை அவா - பற்றையும் ஆசையையும்
அகற்றி - போக்கியும்,
நையும் இயல் - சோருமியல்புடைய
வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் - வாக்கு முதலிய கன்மேந்திரியங்களும்
பலவும் - (அவற்றின் வியாபாரங்களும் ஆகிய) எல்லாவற்றையும்
நீக்கி - தொலைத்தும்

(நல்லோர்க்கு)

செறிந்து - பயன்படுமாறு

(அவர்பால்)

நிறைந்து - நிரம்பி
ஓடி - பாய்ந்தும்,

(பிற தேவர் எவராலும்)

போக்கு அரிய - போக்கமாட்டாத

பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கும்
அந்தமனம் புத்தியுட னாங்காரஞ் - சிந்திவிழ
மோதி யருணீர்மை ஓங்கிவிறல் முக்குணமுங்
காதி உரோமமெலாங் கைகலந்து - சீதப்
புளகம் அரும்பப் புலன்மயக்கம் போக்கி

பந்தம் எனும் சோலை	-	(சங்கற்ப விகற்பங்களாகிய) பந்தம் எனுங் காட்டை
பறித்து	-	களைந்தெறிந்து
பரந்து	-	விரிந்தும்,
அலைக்கும்	-	பலவிடங்களிலும் இழுத்தடிக்கும்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம்	-	அந்தக் கரணங்கள்
சிந்தி விழ	-	செயலற்றுக் கிடக்கும்படி
மோதி	-	(அவற்றை) அடித்துத் தள்ளியும்,
(அக்கரணங்களெல்லாம்)		
அருள் நீர்மை	-	சிவகரணமாந் தன்மையால்
ஓங்கி	-	மேம்பட்டும்
விறல்	-	வலிமிக்க
முக்குணமும்	-	சத்துவ இராசத தாமதமென்ற மூன்று குணங்களின் தொழில்களை
காதி	-	ஒழித்தும்,
உரோமம் எலாம்	-	(உடம்பு தோறும்) மயிர்க்கால் தோறும்
கை கலந்து	-	தேங்கி
சீத	-	குளிர்ந்த
புளகம் அரும்ப	-	புளகாங்கிதந் தோன்ற
புலன்	-	புலன்களாலுண்டாகிய
மயக்கம் போக்கி	-	மருட்சியைத் தொலைத்தும்,

விளேவில் புலன்மட்ட மேவிக் - களபதன
மாதர் மயக்கம் அறுத்துவளர் மண்டலத்துச்
சோதியொரு மூன்றிணேயுஞ் சோதித்து - நீதியிஞல்
ஆதார மாறினுஞ்சென் றுறியடல் வாயுக்கள்
மீதான பத்தும் மிகப்பரந்து - காதிப்

விளேவு இல்	-	கரும விளேவில்லாத
புலன் முட்ட	-	சுத்த தத்துவ புவனங்களிலும் நிறைந்து
மேவி	-	பொருந்தி
களப	-	வாசனே பூசப்பட்ட
தனமாதர்	-	கொங்கைகளேயுடைய பெண்களின் மேல் செல்லும்
மயக்கம்	-	ஆசையை
அறுத்து	-	நீக்கியும்,
வளர்	-	அகத்தும் புறத்தும் ஓங்கிய
மண்டலத்து	-	பிண்டமான
சோதி ஒரு மூன்றிணேயும்	-	சூரியன் சந்திரன் அக்கினி என்கிற மூன்று ஒளிகளேயும்
சோதித்து	-	(ஆராய்ந்தும்) வரை நிறுத்தியும்,
நீதியினால்	-	முறையே
ஆதாரம் ஆறினும்	-	ஆறு ஆதாரங்களிலும் (தியானிப்பவர்களுக்கு)
சென்று ஆறி	-	போய்த் தங்கி,

(*'அடல் வாயுக்கள் மீதான'* என்றதை *'மீதான அடல்வாயுக்கள்'* என மாறுக)

மீதான	-	வசப்படாத
அடல்	-	வலியுள்ள
வாயுக்கள் பத்தும்	-	தச வாயுக்களிலும்
மிகப் பரந்து	-	மிகவும் விரவி
காதி	-	அடக்கி,

பிருதிவியப்புத்தேயு வாயுவா காய

உறுதி நிலமைந்து மோடி - மறுவிலா

நான்முகன்மா லீசன் மகேசன் நலஞ்சிறந்த

தான்முக மைந்தாஞ் சதாசிவமும் - ஆனதொரு

விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியில்

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாய உறுதி நிலம் ஐந்தும்	-	பிருதிவி முதலிய பூதங்களின் வலியுள்ள ஐந்து வகை அண்டங்களிலும்
ஓடி	-	சென்று விரவி,
மறு இலா	-	பிறப்பிறப்பாதி குற்றங்களில் நீங்கிய
		(சுத்த வித்தியாவாசிகளாகிய)
நான்முகன் மால் ஈசன் மகேசன்	-	நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளிலுள்ள பிரமன் விஷ்ணு உருத்திரனிவர்களோடு ஈசுர தத்துவத்திலுள்ள மகேசுரனும்
நலம் சிறந்த	-	மேன்மை சிறந்த
தான் முகம்	-	தனக்குரிய முகங்கள்
ஐந்து ஆம்	-	ஐந்தையும் உடைய
சதாசிவமும்	-	(சதாசிவ தத்துவத்திலுள்ள) சதாசிவமும்
ஆனது	-	ஆகிய
ஒரு	-	ஒப்பற்ற
விந்து	-	விந்து தத்துவ விந்து மூர்த்தியும் (அதோ முகமான பராசத்தியும்)
நாதம்	-	நாத தத்துவ மூர்த்தியும் (ஊர்த்துவ முகமான)
கடந்து	-	ஆகிய எல்லாரையுந் தாண்டி அத்தத்துவங்களின் உபாதாரமாகிய சுத்தமாயைக்கும் அப்பாலாகிய
சுத்த வெறு வெளி	-	அப்பாழ் வெளியில்

அந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் - முந்திவரு
மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளடக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்திட் - டெவ்வறிவுந்
தானுய வீடளித்துத் தன்னிற் பிறிவிலா
ஊனுகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து - மேனியிலா (55)

அந்தம் இலா	-	முடிவற்ற
பாழ்	-	சிந்தனைக்கும் வாராத அப்பாழ் வெளியையும்
அடங்க	-	தன்பால் வியாப்பியமாயடங்கும்படி
தேக்கிய பின்	-	முழுக்க நிறைந்தபின்
முந்தி வரும்	-	அநாதியான
அ அறிவுக்கு	-	அப்பராசக்தி சொரூபமாகிய அருள் ஞானத்துக்கு

(பயனுகி)

அப்பாலும் சென்று	-	மேலும் சென்று
அகண்டம் உள் அடக்கி	-	பரநாதமுங் கடந்து
செவ்வறிவே ஆகி	-	சுத்த ஞானமேயாகி
திகைப்பு ஒழிந்திட்டு	-	சந்தேகத்திற் கிடனின்றி
எவ்வறிவும்	-	எவ்வகைப்பட்ட ஞானமும்
தான் ஆய்	-	தானின்றி யமையாததாய்
அ வீடு அளித்து	-	(தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு) அவ்வானந்த முத்தியைக் கொடுத்து
தன்னில் பிரிவு இலா	-	தன்னை விட்டுப் பிரியாத
ஊன் ஆகி	-	தனக்கே திருமேனியாகி,
எ உயிர்க்கும்	-	மூவகை யுயிர் வருக்கங்கட்கும்
உள்புகுந்து	-	அறிவில் விளங்கி
மேனியில் ஆ	-	தேகத்திலுள்ள

வஞ்சவத்தை யுங்கடந் தாயபெரும் பேரொளிக்கே
தஞ்சமெனச் சென்று தலைப்பட்டு - வஞ்சமறத்
தானந்த மில்லாத தண்ணளியா லோங்கிவரு
மானந்த மென்பதோ ராறுடையான் - ஆனந்தம்
பண்ணும் பயன்கருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையா - னெண்ணெண்

அஞ்சு அவத்தையும்	-	சாக்கிர முதலிய ஐந்து அவத்தைகளையும்
கடந்து	-	கடந்து
ஆய	-	பொருந்திய
பெரும் பேர் ஒளிக்கே	-	மிகுந்த ஒளி மயமாகிய தற்சிவத்தில்
தஞ்சம் எனச் சென்று	-	அடைக்கலம் எனப்போய்
தலைப்பட்டு	-	புகுந்து,
தான் வஞ்சம் அற	-	தான் வேறொன்றையுஞ் சாராமல்
அந்தம் இல்லாத	-	அழிவற்ற
தண் அளியால்	-	குளிர்ந்த கருணையினால்
ஓங்கி வரும்	-	பெருக்கெடுத்தோடும்
ஆனந்தம் என்பது	-	ஆனந்தம் என்ற
ஓர்	-	ஒப்பற்ற
ஆறு உடையான்	-	ஆற்றைத் தனக்கு அங்கமாக வுடையவன்.
ஆனந்தம் பண்ணும்	-	ஆனந்தத்தைத் தருகிற
பயன் கருதி	-	பயனை விரும்பி
ஆகமங்கள் பார்த்து	-	வேதாகமங்களைப் படித்து
உணர்ந்து	-	ஆராய்ந்துணர்ந்து
(அவ்வளவில்)		
நண்ண அரியது	-	அடைதற் கரியதாகிய
ஒரு நாடு உடையான்	-	ஒப்பற்ற சிற்சத்தி யென்கிற சிவலோகத்தை நாடாக வுடையவன்.
எண்எண் கலையால்	-	64 கலைப் பயிற்சியாலும்

கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையான தெல்லாமு நீத்தங் - கலைவறவே
தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால்
ஓட்டற்று வீற்றிருக்கு மூருடையான் - நாட்டத்தால் (60)

உணர்ந்து	-	அறிவைப் பெருக்கி
	(அதன் பயனாக)	
கருத்து அழிந்து	-	சிவன் கழலிற் செறிதல் என்றதையெண்ணி நெஞ்சழிந்து
காமம்	-	ஆசை
நிலையானது	-	நிலைப்பதற்குரிய
எல்லாமும்	-	எல்லாப் போகத் தானங்களையும்
நீத்து	-	விலக்கி,
அங்கு	-	அவ்விலக்கிய விடத்தே
அலைவு அற	-	சலிப்பு அற்று
தேட்டு	-	தேடுதற்கான சுதந்திரமும்
அற்ற	-	இழந்த
சிந்தை	-	ஆன்ம ஞானத்தில்
	(பிரகாசிக்கிற)	
சிவஞான மோனத்தால்	-	சிவஞானத்துள் அங்ஙனம் தன் செயலற்றுக் கிடத்தலால்
ஓட்டற்று	-	அவ்வான்மாவை விட்டு நீங்காமல்
வீற்றிருக்கும்	-	அதில் எழுந்தருளியிருந்து அதற்கு அநுபவமாய் வருதல் என்கிற
ஊர் உடையான்	-	தலைநகரை யுடையவன்.

(*'நாட்டத்தால்..... மெய்யினான்'* என்றதை *'பொய்யில் கூடாமல் சிந்தை மயக்கம் தெளிந்து, நாட்டத்தால் தெண்ணீர் அருவி விழ, உண்ணீர் மை எய்த, உரோமம் எலாம் நண்ணும் புளகம் புனை மெய்யர் உள கம்பம் கொண்டு உள்ளுருகி, அளவிலா மாலாய் இருக்குமவர் மனத்தை வாங்க அருள் மேலாய் விளங்கும் அலங்கல் மெய்யினன்'* என மாறுக.)

தெண்ணீ ரருவிவிழச் சிந்தைமயக் கந்தெளிந்
துண்ணீர்மை யெய்த உரோமமெலா - நண்ணும்
புளகம் புனைமெய் யர்பொய் யிற்கூடாமல்
உளகம்பங் கொண்டுள் ளுருகி - அளவிலா
மாலா யிருக்கு மவர் மனத்தை வாங்கவருண்

பொய்யில்	-	பிரபஞ்சத்தில்
கூடாமல்	-	சிக்காமல்
சிந்தை	-	ஆன்மாவில்
மயக்கம்	-	ஐயம்
தெளிந்து	-	நீங்கி
நாட்டத்தால்	-	கண்களிலிருந்து
தெள் நீர்	-	ஆனந்தக் கண்ணீர்
அருவி விழ	-	அருவி போல விழ
உள்	-	ஆன்மாவில்
நீர்மை	-	ஞானம்
எய்த	-	பிரகாசிக்க
உரோமம் எலாம்	-	மயிர்க்கால் தோறும்
நண்ணும்	-	உண்டாகிற
புளகம் புனை	-	புளகாங்கிதத்தால் மூடப்பட்ட
மெய்யர்	-	உடம்பையுடைய நல்லன்பர்
உள கம்பம் கொண்டு	-	உள்ளத்தில் நடுக்கங் கொண்டு
உள் உருகி	-	தான் கரைந்து
அளவு இலா	-	அளவற்ற
மால் ஆய்	-	வாஞ்சையுடன்
இருக்குமவர்	-	இருக்கும் ஞானிகள்
மனத்தை	-	தம் உள்ளத்தை
வாங்க	-	பிரபஞ்ச விஷயங்களிலிருந்து உள்ளே திருப்ப

(அதனல்)

மேலாய் விளங்கலங்கல் மெய்யினன்- தோலாத
வானம் புவனம் மலைகடலேழ் பாதாளம்
ஊனைந்து பூதத் துயிருணர்ச்சி - ஞானமாய்
எல்லாமா யல்லவா யெண்ணுவா ரெண்ணத்து
நில்லாமல் நிற்குநீள் வாசியான்- சொல்லாரும் (65)

மேலாய்	-	மேம்பட்டு
விளங்கும்	-	விளங்குகிற
அருள் அலங்கல்	-	தனதருளென்னும் மாலையை
மெய்யினன்	-	தன் திருமேனியில் தரித்தவன்.
தோலாத	-	கெடுதலில்லாத
வானம்	-	வெளிகளாகிய மாயைகளும்
புவனம்	-	அவற்றின் காரியமாகிய புவனங்களும்
மலை	-	அஷ்டகுல பர்வதங்களும்
கடல்	-	சப்த சமுத்திரங்களும்
ஏழ் பாதாளம்	-	சப்த பாதாளங்களும்
ஊன்	-	உடம்பின் காரணமாகிய
ஐந்து பூதத்து	-	பஞ்ச பூதம் பற்றிய
உயிர் உணர்ச்சி	-	உயிர்களின் அறிவு அளவின்
ஞானம் ஆய்	-	அதனை யியக்கும் திரோதான சத்தியும் ஆய்
எல்லாம் ஆய்	-	எல்லாவற்றிலும் வியாபித்தும்
அல்லவாய்	-	அவற்றில் தொடக்குண்ணமல்
எண்ணுவார்	-	அளந்தறிபவரின்
எண்ணத்து	-	அளவையறிவில்
நில்லாமல்	-	அடங்காமல்
நிற்கும்	-	முனைப்பற்ற ஞானத்தில் வசப்படும்
நீள்	-	பரந்துள்ள
வாசியான்	-	(அகப்படாமையும் அகப்படுவதுமாகிய) குதிரையையுடையவன்.
சொல் ஆரும்	-	வேதத்திற் சொல்லப்பட்ட

பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதார மாகி யகண்ட நிறைந் - தோத
வரிதா யெளிதா யருமறையா றங்கத்
துருவா யுயிரா யுணர்வாய்ப் - பெரிதாய
வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்

பாதாளம்	-	கீழுலகங்களிலும்
ஊடுருவி	-	சென்று
பார் ஏழும்	-	இவ்வுலகம் ஏழுக்கும்
விண் ஏழும்	-	மேலுலகம் ஏழுக்கும்
ஆதாரம் ஆகி	-	பற்றுக் கோடாகி,
அகண்டம்	-	சுத்த மாயா புவனங்களிலும்
நிறைந்து	-	வியாபித்து,
ஓத	-	சுட்டுணர்வுக்கு
அரிதாய்	-	அடங்காமல்
எளிதாய்	-	சுட்டிறந்த ஞானத்துக்கு வசமாவதாய்
அருமறை	-	அரிய வேதத்திலும்
ஆறு அங்கத்து	-	சடங்கத்திலும்
உருவாய்	-	அவற்றின் வடிவாய்
உயிராய்	-	பிராணனுய்,
உணர்வாய்	-	ஞானமாய்,
(அடியாரிடத்து)		
பெரிது ஆய	-	பெரிய
வெய்ய துயர்	-	கொடிய துயரமென்னும்
பாசம்	-	பந்தத்தை
அற	-	அற்று விழும்படி
வீசியே	-	தறித்தெறிந்து
வெம்பிறவி	-	கொடிய பிறவியென்னும்

துய்ய கடலைத் துகளெழுப்பி - ஐயமுறுங்
காமக் குரோதலோப மோகமதங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் தலை மிதித்து - நாமத்தாற்
கத்துஞ் சமயக் கணக்கின் விறற் கட்டறுத்துத்
தத்தம் பயங்கொலைக ளாங்கழித்தே தத்திவரும் (70)

துய்ய கடலை	-	பயனற்ற சமுத்திரத்தை
துகள் எழுப்பி	-	தூள் பறக்கும்படி செய்து, (வற்றச் செய்து)
ஐயம்	-	சந்தேகம்
உறும் காமம்	-	பேராசை
குரோதம்	-	கோபம்
லோபம்	-	பொருளாசை
மோகம்	-	மயக்கம்
மதம்	-	செருக்கு
காய்ந்து அடர்த்து	-	கோபித்துத் தொலைத்து,
சாம் அத்தொழிலின்	-	சாவதற்குக் காரணமாய் வருகிற பிரபஞ்ச போகத்தை
தலை மிதித்து	-	தலையில் மிதித்து நசுக்கி,
நாமத்தால்	-	பெயரளவில் (வேறு வேறு பெயர்களையுடையவாய்)
கத்தும்	-	(வெவ்வேறு கொள்கைகளை) முழங்கிக் கொண்டிருக்கிற
சமயக் கணக்கின் விறல்	-	பலவாகிய சமயங்களின் வலிமையை
கட்டு அறுத்து	-	அடியோடு தொலைத்து,
தம் தம்	-	அவற்றால் வரக்கூடிய
பயம்	-	அச்சப் படுதல்
கொலைகள்	-	கொலை செய்தல் முதலியவற்றிற்கு (இசைதலை)
ஆங்கு	-	அப்போதே
அழித்தே	-	தொலைத்து
தத்தி வரும்	-	சிறிது சிறிதாக வரக்கூடிய (புத்திரர் முதலிய)

பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்தம்
மாசைக் கருத்தை யறவீசி - நேசத்தால்
ஆனவே கங்கொண் டருண்மும் மதத்தினல்
ஊனையார் தத்துவங்க ளுட்புகுந்து - தேனைப்
பருகிக் களித்துயர்ந்து பன்மறைநாற் கோட்டால்
மருவித் திகழ்ஞான வானையான் - இருமுச்

பாசக் குழாத்தை	-	உறவின் முறையார் தொடர்பை
பட அடித்து	-	அறும்படி அழித்து,
பாவையர் தம்	-	மாதர் மேலோடுகிற
ஆசைக் கருத்தை	-	ஆசையாகிய எண்ணத்தை
அற வீசி	-	முழுக்கத் தொலைத்து,
நேசத்தால்	-	பெருங் கருணையால்
ஆன	-	உண்டான
வேகம் கொண்டு	-	வேகத்தோடு
அருள்	-	அருள் வடிவாகிய
மும்மதத்தினல்	-	உமை, திரு, வாணியென்னும் சத்திகளாகிய மும்மதத்தினலே
ஊனை ஆர்	-	உடம்பிலுள்ள
தத்துவங்கள் உள் புகுந்து	-	தத்துவங்களிற் பொருந்தி
தேனை	-	பசும்போதக் கவளத்தை
பருகி	-	உண்டு
களித்து	-	மகிழ்ந்து
உயர்ந்து	-	நிமிர்ந்து
பல்மறை	-	பலவாகிய வேதம் என்னும்
நால் கோட்டால்	-	நான்கு கொம்புகளால்
மருவி	-	பொருந்தி
திகழ்	-	விளங்குகின்ற
ஞான ஆனையான்	-	சர்வஞ்ஞத் துவம் என்னும் யானையையுடையவன்.
இருமுச்சமயம்	-	வாமம், வைரவம், மாவிரதம், காளாமுகம், பாசுபதம், சைவம் என்ற ஆறு சமயங்களையும்

சமயங் கடந்து தனக்கொப் பிலாது
சுமைதுன்ப நீக்குந் துவசன் - கமையொன்றித்
தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
இம்மை மறுமை யிரண்டகற்றிச் - செம்மையே (75)
வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மங்கே யுறவமைத்துத் - தேயுவால்

கடந்து	-	தாண்டி
தனக்கு ஒப்பு இலாது	-	தனக்குச் சமமில்லாததாகி
சுமை	-	பிரபஞ்ச வியாபாரத்தையும்
துன்பம்	-	அதனுல் வரும் துயரத்தையும்
நீக்கும்	-	நீக்கவல்ல
துவசன்	-	சித்தாந்த சைவம் என்னும் கொடியை யுயர்த்தியவன்.
		(இந்திரிய நிக்கிரக மாகிய)
கமை ஒன்றி	-	பொறுமையோடு பொருந்தி
தம்மை மறந்து	-	முனைப்படங்கி
		(பிராண வாயுவால்)
தழல்	-	மூலாதாரத் தக்கினியின்
ஒளி	-	ஜொலிப்பை
உள்ளே	-	உள்ளே
இருத்தி	-	ஜொலிப்பித்து
இம்மை மறுமை இரண்டு அகற்றி	-	இவ்வுலக சுகம், மறுவுலக சுகம் இரண்டையும் வெறுத்து
வாயுவை ஓடா வகை	-	இடைகலை பிங்கலைகளை நடவாதபடி
செம்மையே நிறுத்தி	-	செவ்வையாகத் தடுத்து
வானத்து வாயுவையும்	-	புறம்பேயுள்ள காற்றையும்
அங்கே	-	அப்போது
உற அமைத்து	-	உள் நுழையாதபடி தடுத்து
		(சுழுமுனை நாடியில் உண்டான)
தேயுவால்	-	மூலாதார அக்கினியால் இலாடத் தானத்துச் சந்திர மண்டலத்துத் தாக்கி உண்டாகிய அமுத தாரையைப் புசித்து நரை திரை மூப்பு மரணம் நீங்கி

என்று மொருதகைமை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமுரசோ - னன்றியும்
மாலு மயனும் வகுத்தளித்த வையமெலாஞ்
சாலுமதற் கப்பாலு மெப்பாலும் - மேலே
யுலகு முலகா லுணரவொண்ணு வூரு

என்றும்	-	சிரஞ்சீவியாய் (அளவற்ற காலம்)
ஒரு தகைமையாய்	-	வச்சிர சரீரத்தோடு நித்தராய்
இருக்கும்	-	வாழ்கிற
இன்பருளே நின்று	-	மெய்யன்பரின் இதயத்திலிருந்து
முழங்கும்	-	ஒலித்துக் கொண்டிருக்கிற
		[அருள்நாத ஒலியாகிய]
நெடு முரசோன்	-	**பெரிய முரசையுடையவன்.**
அன்றியும்	-	அல்லாமலும்
மாலும் அயனும்	-	விஷ்ணுவும் பிரமனும்
வகுத்து அளித்த	-	(எதிர் நிரல் நிரையாக) படைத்துக் காத்த
வையம் எலாம்	-	பிரகிருதி புவன மத்தனையினும்
சாலும்	-	சிறந்த
அதற்கு	-	அப்பிரகிருதிக்கு
அப்பாலும்	-	அப்பாலுள்ள உருத்திரராலுண்டாக்கப்பட்ட (கீழ்ப்பட்ட) அசுத்த மாயா புவனங்களத்தனையிலும்,
மேலே உலகும்	-	காரணேசுரர்களால் உண்டாக்கப்பட்ட அசுத்தமாயையிலுள்ள மேற்பட்ட புவனங்களத்தனையிலும்,
உலகால்	-	அவ்வுலகத்தினராலும்
உணர ஒண்ணு	-	அறியப்படாத
ஊரும்	-	குய்ய புவனங்களத்தனையிலும்,

மிலகி நடக்குமெழி லாணையா - னலகிறந்த
காட்சியான் காட்சிக்குங் காணான் கலைஞான
வாட்சியா னாட்சிக்கு மாயினான்- சூட்சியான் *(80)*

இலகி	-	பிரகாசித்து
நடக்கும்	-	செல்லுகிற
எழில்	-	அழகிய

(முழு முதன்மையாகிய)

ஆணையான்	-	**ஆஞ்ஞா சக்கரத்தை யுடையவன்.**
1. மலை	-	எட்டுக் குணம்.
2. ஆறு	-	ஆனந்தம்
3. நாடு	-	வேதாகமங்களுக்கு அதீதமாகிய சிற்சத்தி
4. நகர்	-	அனுபவம்
5. மாலை	-	மெய்யன்பரறிவில் விளங்குகிற அருள்
6. குதிரை	-	முனைப்புற்ற ஞானத்துக்கு அகப்படாமையும், முனைப்பற்ற ஞானத்துக்கு வசமாவதுமாதல்
7. யானை	-	பசு போதத்தை யுண்டல்
8. துவசம்	-	சித்தாந்த சைவம்
9. முரசு	-	அருள்நாத ஒலி
10. ஆணை	-	முழு முதன்மை
அலகு இறந்த	-	அளவற்ற (ஒன்றேடொன் றிசையாத)
காட்சியான்	-	திருமேனி கொள்பவன்;
காட்சிக்கும்	-	தற்போதத்துக்கும்
காணான்	-	அறியப் படான்;
கலைஞான	-	வேதாகம ஞானங்களை
ஆட்சியான்	-	தன்னதாகக் கொண்டவன்;
ஆட்சிக்கும்	-	அப்படித் தன்னதாகக் கொண்டதோடு
ஆயினான்	-	அந்த ஞானங்களாகவுமிருப்பவன்;
சூட்சியான்	-	உயிர்கள் வீடு பெறுதற்கான காரியங்களைக் கருதவல்லவன்;

பாருந் திசையும் படரொளியா லேநிறைந்தான்
தூருந் தலையுமிலாத் தோன்றலான் - வேராகி
வித்தாகி வித்தின் விளைவாகி மேவுதனுச்
சத்தாதி பூதங்க டாளுகிச் - சுத்த

பாரும்	-	உலகிலும்
திசையும்	-	எட்டுத் திக்கிலும்
படர் ஒளியாலே	-	விரிந்த பிரகாசத் தாலே
நிறைந்தான்	-	வியாபித்தவன்;
தூரும்	-	அடியும்
தலையும்	-	முடியும்
இலா	-	இல்லாத
தோன்றலான்	-	தான் றேன்றியானவன்;

(தாவரங்களில்)

வேர் ஆகி	-	வேர் ஆகியும்
வித்து ஆகி	-	விதை ஆகியும்
வித்தின்	-	அவ்வித்திலிருந்தும் (வேரிலிருந்தும்)
விளைவு	-	விளைகிற மரம் கிளை இலை முதலியவும்
ஆகி	-	ஆகி

(சங்கமங்களில்)

மேவு	-	(உயிர்) பொருந்துகிற
தனு (ஆகி)	-	உடம்பு ஆகியும்
சத்தாதி பூதங்கள் (ஆகி)	-	(அதன் காரணமாகிய) பஞ்ச பூதங்கள் ஆகியும், (அதன் காரணமாகிய சூக்கும பூதங்களாகிய) தன் மாத்திரைகள் ஆகியும்,
தான் ஆகி	-	(அவற்றின் காரணமாகிய) பிரகிருதி மாயை ஆகியும்

(சுத்தம், வெறுவெளி, பாழ், வெறும்பாழ், அப்பால்)

சுத்தம்	-	அபர விந்து (சதா சிவாதிகளுக்கு தனுவாதிகளாய் வருதல், மந்திரங்கள் தோன்றுதல், சிவசத்திகள் தோய்தல் இக்காரணங்களால் அபர விந்து சுத்தம் எனப்பட்டது)

வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பா

லுறுபொருளாய் நின்ற வொருவன் - பொறியிலியேன்

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த

வெறுவெளி	-	அபரநாதம் (சிவசத்தி தாக்கிப் பராசத்தி வெளிப்படுதல். அருவமாதல், உருப்பெறுதல் யாதுமில்லை. அதாவது அங்கு உண்டாவது ஒன்றுமில்லை. இக்காரணங்களால் அபரநாதம் வெறுவெளி எனப்பட்டது)
ஆய்	-	ஆகி
பாழ்	-	பரவிந்து (ஆன்ம சத்தி செயலற்ற இடம், நிராமயம், நிர்மலமாய இடம். இக்காரணங்களால் பரவிந்து பாழ் எனப்பட்டது)
ஆய்	-	ஆகி
வெறும்பாழ் (ஆகி)	-	பரநாதம் ஆகி அதற்கும் (அங்குச் சென்ற உயிர் தானற்ற விடம். இக்காரணத்தால் பரநாதம் வெறும்பாழ் எனப்பட்டது)
அப்பால்	-	அச்சிவ சத்திகளையும் வெளிப்படுத்தாமல் திரிபுடியற்று நின்று நிலையாகிய அவ்விடத்தில்
உறுபொருள் ஆய் நின்ற	-	சிவமேயாய் நின்ற
ஒருவன்	-	ஒப்பற்ற பரமன்;
பொறியிலியேன்	-	இந்திரியங்களுக்கு வசமாய் அறிவிழந்த நான்
வெம்பும்	-	துன்பத் தீயால் வதங்குகிற
பிறவி அலை	-	பிறவிச் சுழற்சியில்
(இனி என்றுமே)		
வீழாமல்	-	அகப்படாமல்
வீடு அளித்த	-	முத்தியைத் தந்த

சம்பந்த மாமுனியென் தம்பிரான்- அம்புவியோர்
போற்றுந் திருவடியென் புன்தலைமே லேபொறித்தோ
னேற்றின் புறத்தமைந்த வெங்கோமான்- சாற்றுவார் (85)
சாற்றும் பொருளான் தனிமுதல்வன் தானல்லான்
வேற்றின்ப மில்லா விளங்கொளியான்- போற்றுங்
குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்

சம்பந்த மாமுனி	-	மறைஞான சம்பந்த சிவாசிரியர் என்ற திருநாமத்தோடு கூடி
என் தம்பிரான்	-	எனக்கு ஆசாரியனுய் வந்த மேலோன்;
அம்புவியோர்	-	அழகிய உலகத்திலுள்ள மகநீயர்கள்
போற்றும்	-	துதிக்கிற
திருவடி	-	தமது சீபாதத்தை
என்	-	அடியேனது
புன் தலை மேல்	-	ஒன்றுக்கும் பற்றுத சிரசின் மேல்
பொறித்தோன்	-	வைத்துத் திருவடி தீக்ஷை செய்தவன்;
ஏற்றின் புறத்து	-	தர்ம ரூபமான இடபத்தின் மேல்
அமைந்த	-	எழுந்தருளியிருக்கிற
எம் கோமான்	-	எங்கள் கருத்தன்;
சாற்றுவார் சாற்றும்	-	அவ்வம் மதத்தார் போற்றிப் புகழ்கிற
பொருளான்	-	கடவுளாயிருப்பவன்;
தனி முதல்வன்	-	ஒப்பற்ற பரமன்
தான் அல்லான்	-	ஆயினும் அக்கடவுள் ஆகாதவன்;
இன்பம்	-	இன்பப் பொருள்
வேற்று இல்லா	-	(தன்னை விடப்) பிறிதில்லாத
விளங்கு	-	விளக்கமுடைய
ஒளியான்	-	பிரகாச மூர்த்தி.
போற்றும்	-	நால்வகைச் சத்தி நிபாதமும் போற்றக்கூடிய
குருவேடம் ஆகி	-	ஆசாரிய வேடந் தரித்திருந்தாலும்
குணம் குறி ஒன்று	-	குணங்குறிகளை யில்லாத

பெருவேட மாய்நிறைந்த பெம்மான்- கருவேடங்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர் வாழ் தில்லையான்
எட்டுமவர் கெட்டா வியல்பினன்- மட்டவிழ்தார்
வானேன் பவனி வரக்கண்டு வல்வினையேன்
ஏனேரு மேத்துதற்கண் டேத்தினேன்- தானென்னைப்

பெருவேடம் ஆய்	-	அருளே திருமேனியனாய்
நிறைந்த	-	வியாபித்த
பெம்மான்	-	முழு முதல்வன்.
கரு	-	கருப்பங்களில்
வேடம் கட்டும்	-	உடல் எடுப்பதற்குக் காரணமான
உரு	-	வினைகளையும்
கட்டு	-	ஆணவத்தையும்
அறுத்தான்	-	அறுத்தெறிந்தவன்;
கற்றவர்	-	தில்லை மூவாயிரவர்
வாழ்	-	வசித்து வருகிற
தில்லையான்	-	சிதம்பர தலத்தில் எழுந்தருளியிருப்பவன்.
எட்டும் அவர்க்கு	-	முனைப்பால் காண முயன்ற பிரம்ம விஷ்ணுக்களுக்கு
எட்டா	-	காணப்படாத
இயல்பினன்	-	இயல்பினையுடயவன்.
மட்டு	-	தேனை
அவிழ்	-	சொரிகிற
தார்	-	கொன்றை மாலையணிந்த
வானேன்	-	சிவன் (மறைஞான சம்பந்தன் என்ற திருநாமத்தோடு)
பவனி வர	-	அடியேனை யாட்கொள்ளும் பொருட்டு வீதியில் வலம் வருவதை
கண்டு	-	தரிசித்து
வல்வினையேன்	-	பாவியேன்
ஏனேரும்	-	சர்வான்மாக்களும்
ஏத்துதல்	-	வழிபடுவதை
கண்டு	-	பார்த்து
ஏத்தினேன்	-	வழிபட்டேன்.
தான்	-	அவன்
என்னை	-	ஒன்றுக்கும் பற்றாத அடியேனை

பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தை யெல்லா
நீத்தான் நினைவுவே ருக்கினு - னேத்தரிய (90)
தொண்ணூற் றறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான்
கண்ணூறு தேனமுதங் காட்டினுன் - வெண்ணீரும்
வேடமும் பூசையுமே மெய்யென்றுன் பொய்யென்றுன்

பார்த்தான் - திருக்கண் சாத்தினுன்.

(அம்மாத்திரத்தில்)

பழைய வினை - அடியேனது சஞ்சித வினை முழுவதையும்

பஞ்ச மலக் கொத்தை - ஆணவம், திரோதை, மாயை, கன்மம், மகாமாயைகளையும்

எல்லாம் - ஆகிய எல்லாப் பந்தங்களையும்

நீத்தான் - (ஞானுக்கினியால்) எரித்தான்

(என்னைத் தானுக்கி என் கரணத்தைச் சிவகரணமாக்கி)

நினைவு - என்னறிவை

வேறு ஆக்கினுன் - தன் வசமாக்கி விட்டான்.

ஏத்தரிய - மதிக்க முடியாத

தொண்ணூற்றறுவர் - 96 தத்துவங்களும்

பயில் - தம் தம் வேலைகளைச் செய்கிற

தொக்கில் - தொகையாகிற உடம்பிலுள்ள

துவக்கு - சம்பந்தத்தை

அறுத்தான் - தறித்து விட்டான்.

கண் - அவன் பார்வையிலே

ஊறு - விளைகின்ற

தேன் அமுதம் - தேனும் பாலும் போன்ற பேரின்பத்தை

காட்டினுன் - தந்தான்

வெண்ணீறும் - திருநீறு அணிதலும்

வேடமும் - அடியார் திருவேடத்தை வணங்கலும்

பூசையுமே - சிவபூசை செய்தலுமே

மெய் என்றுன் - சத்தியம் என்றுன்.

மாடையும் வாழ்க்கை மனேயுமே - நாடரிய
வஞ்செழுத்தி னுள்ளீ டறிவித்தா னஞ்சழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி - வஞ்செழுத்தை
யுச்சரிக்குங் கேண்மை யுணர்த்தியத னுச்சரிப்பு
வைச்சிருக்க மந்த வழியாக்கி - அச்சமறச்

மாடையும்	-	திரவியமும்
வாழ்க்கையும்	-	பிரபஞ்ச வாழ்வும்
மனேயும்	-	நிலங்கரைகளும்
பொய் என்முன்	-	நிலையில்லாதன என்முன்.
நாடு அரிய	-	குரு பரம்பரையில்லாமல் வேறு பிரகாரமாக அறிதற்கரிய
அஞ்சு எழுத்தின்	-	பஞ்சாக்கரத்தின்
உள்ளீடு	-	தாற்பரியத்தை
அறிவித்தான்	-	எனக்கு உணர்த்தினுன்
அஞ்சு எழுத்தை	-	பஞ்சாக்கரத்தை
நெஞ்சு	-	என் உள்ளத்தில்
அழுத்தி	-	பதிப்பித்து
நேச	-	அவ்வுள்ளத்தைக் கவரக் கூடிய
மயல்	-	ஆசையை
ஆக்கி	-	அளவு கடக்கச் செய்து
அஞ்சு எழுத்தை	-	பஞ்சாக்கரத்தை
உச்சரிக்கும்	-	தியானிக்கும் (ஓதும்)
கேண்மை	-	முறையை

<u>தியானிக்கும் முறை</u>

இலாடம்	—	**சி**
தாலு	—	**வ**
இதயம்	—	**ய**
நாபி	—	**ந**
மூலம்	—	**ம**

உணர்த்தி	-	உணர்த்தி,
அதன்	-	அம்மந்திரத்தின்
உச்சரிப்பு	-	தியானம்
வைச்சிருக்கும்	-	தன்னுடன் கொண்டுள்ள
அந்த வழி	-	ஏகனுகி நிற்றலாகிய அந்த நிற்கு முறையையும்
ஆக்கி	-	கை கூடப் பண்ணி,
அச்சம் அற	-	சஞ்சலமின்றி

சென்று விளக்கை யெழத்தூண்டிச் செஞ்சுடரின்
ஒன்றி யொருவிளக்கி னுள்ளொளியாய் - நின்ற (95)
பெருவிளக்கின் பேரொளியா யுள்ளே பிரசம்
மருவும் மலர் போல் மதித்தங் - கருவினுருக்
கொள்ளா வருளைக் கொளுத்திக் குணங்குறியொன்

சென்று	-	(அந்நிலையில் இடைவிடாது) சென்று
விளக்கை	-	(அப்போது தோன்றுகிற) அருட் பிரகாசத்தை (சியை)
எழ	-	மிகும்படியாக
தூண்டி	-	(நிற்கு முறையாலும் ஓது முறையாலும்) எழுப்பி,
செஞ்சுடரின்	-	(அப்படியெழுந்த) மேலான அருளில் (வ வின்)
ஒன்றி	-	இயைந்து (ய வைக் கூட்டி)
ஒரு விளக்கின்	-	ஒப்பற்ற அவ்வருளின்
உள் ஒளி ஆய் நின்ற	-	உட்பொருளாய் நின்ற
பெருவிளக்கின்	-	சிவத்தின்
பேர் ஒளியாய்	-	ஆனந்த மயமாகி,
உள்ளே	-	அவ்வானந்தத்தில் (இருத்தி)

(போக்குவரத்து இல்லாமல்)

பிரசம் மருவும்	-	தேன் இருக்கிற
மலர் போல்	-	தாமரைப் பூப்போன்று
மதித்து	-	(அச்சிவத்தைப்) பாவித்து,
அங்கு	-	பாவிக்குமிடத்தில்
அருவின்	-	மாயையில்
உருக்கொள்ளா	-	தோயாத
அருளை	-	திருவருளை
கொளுத்தி	-	பிரவேசிப்பித்து
குணம் குறி	-	காண்டல் கருதல்
ஒன்று இல்லா	-	எதுவுஞ் செல்லாத

றில்லா விடத்தே இளைப்பாற்றி - விள்ளாத
உள்ளம் முதலாக உள்ளதெல்லாம் வாங்கவருள்
வெள்ள மயலளித்து மேவினன் - கள்ளம்
மறப்பித்தான் மெய்ஞ்ஞான மாக்கிமன மெல்லாம்
இறப்பித்தா னென்பிறவி யீர்த்தான் - விறற்சொல்லுக்

இடத்தே	-	சுகமயமான தன்பால் (அடியேனை) வைத்து
இளைப்பு	-	பிறப்பிறப்புத் துயரை
ஆற்றி	-	போக்கி
விள்ளாத	-	வாய் திறக்க வழக்கில்லாத
உள்ளம் முதலாக	-	உயிர் உடல் பொருள் முதலிய
உள்ளதெல்லாம்	-	அடியேனுடைமையெல்லாம்
வாங்க	-	அவன் தந்தது போல் எடுத்துக் கொள்ள,
அருள் வெள்ள மயல்	-	ஆனந்த வெள்ளப் பற்றையே பற்றுகக் கொள்ளுமாறு
அளித்து	-	(எனக்கு) ஈந்து
மேவினன்	-	அடியேனுள் இரண்டற்ற நிலையில் கூடினன்;
கள்ளம்	-	ஐந்து அவத்தைகளையும்
மறப்பித்தான்	-	போக்கினன்;
மெய்ஞ்ஞானம்	-	என்னை உண்மை ஞானமயமாக
ஆக்கி	-	செய்து
மனம் எல்லாம்	-	கரணச் செயல்களை யெல்லாம்
இறப்பித்தான்	-	இல்லையாக்கினன்.
என் பிறவி	-	என் பிறப்பை
ஈர்த்தான்	-	(இப்பிறப்போடு) தொலைத்தான்.
விறல் சொல்லுக்கு	-	வலிய மந்திரங்களை யுடைய வேதத்துக்கு

கெட்டாளை யார்க்கு மெழுதா வியற்குணங்க

ளெட்டாளை யாற்றா வெழுத்தினன் - மட்டாரும் *(100)*

பாடலா ராடலார் பண்பலார் நண்பலா

ராடலா ராட லகன்பதியாங் - கூடலார்

எட்டாளை - அதீதமானவளை

(ஆற்று எழுதா இயல் என்றதளை ஆற்று (இயல்) எழுதா இயல் எனக் கொள்க.)

யார்க்கும் - யாராலுஞ் செய்ய முடியாத

(இயல்) - செயலையும்

எழுதா - (யாரையும் நிகரெனக்) கூற முடியாத

இயல் - தடத்த வடிவப் பிரபாவத்தையும் (உடையவனுய்)

குணங்கள் (கு) - கிருத்தியத்தின் பொருட்டு சத்துவ இராசத தாமச குணங்களைப் பொருந்தினவனுயினும்,

எட்டாளை் - அவற்றில் அகப்படாதவளை

ஆற்று - எதனினுஞ் தோன்றுத எல்லா மந்திரங்களையுங் காரணமாயிருந்து தோற்றுவதாயுள்ள (செய்யப்படாத)

எழுத்தினன் - பிரணவ மந்திரப் பொருளான் (மட்டாரும் பாடலா ராட்லார் பண்பலார் நண்பலார் ஆடலார் ஆடல் அகன்பதியாம் கூடலார் காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான் பாணர்க் கிலகு பலகையிட்டான் என்றதை ஆடலார் ஆடல் அகன்பதி ஆம் கூடலார் மட்டாரும் பாடலார் ஆடலார் பண்பலார் நண்பலார் பாணர்க்கு இலகு பலகையிட்டான் காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான் என மாறுக)

ஆடல் ஆர் - ஆடல் வகைகள் அத்தளையும் பொருந்திய

ஆடல் - ஆடல்களை

அகன் - தன் அகத்தே கொண்ட

பதி ஆம் - நகரமாகிய

கூடல் ஆர் - மதுரையில் பொருந்திய

காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்
பாணர்க் கிலகு பலகையிட்டான் - சேணிற்
சிறந்த வுருவான் திருமாலுக் கெட்டான்
நிறைந்த திருவுருவில் நிற்போன் - கறங்குடனே

மட்டு ஆரும்	-	(தாளத்தின்) அளவு பொருந்திய
பாடலார்	-	பண்ணின் அளவை கரை கண்டவர்
ஆடலார்	-	நடனக் கலேயில் வல்லவர்
பண்பு அலார்	-	ஆனுல் மனித வியல்புக்கு அதீதமானவர்
நண்பு அலார்	-	மனித குணங்களோடு தொடர்பு கொள்ளாதவர்
	(ஆகிய)	
பாணர்க்கு	-	திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனுர்க்கு
இலகு	-	விளங்கிய
பலகை	-	பலகையை
இட்டான்	-	தந்தருளியவன்.
காண	-	(அவன் வகுத்த முறையாலன்றி வேறு முறையால் அவனேக்) காண முயன்றல்
கிடையாதான்	-	அக்காட்சிக்கு அகப்படாதவன்;
காண்பார்க்கு	-	அவன் வகுத்த முறையால் காணலுறுவார்க்கு
காட்சியான்	-	முன்னிற்பவன்
சேணில்	-	அந்தி வான் போல்
சிறந்த	-	சிவந்த
உருவான்	-	திருமேனியுடையவன்;
திருமாலுக்கு	-	விஷ்ணு முதலியோருக்கு
எட்டான்	-	சேய்மையானவன்
நிறைந்த	-	ஆயினும் வியாபகமான
திரு உருவில்	-	அழகிய ஒளி வடிவோடு
நிற்போன்	-	கலந்து உறைபவன் (எழுவகைப் பிறப்பிலும் உள்ள யோனி பேதங்களிலும்)
கறங்குடனே	-	காற்றுடி

சூறைசுழல் வண்டு சுழற்கொள்ளி வட்டமெனும்
மாறு கருணையினுல் மாற்றினுன் - நீறணிந்த
மெய்யன் நிமல னமலனருள் வீடளிக்கு
மையனறி வுக்கறி வாயினுன் - பொய்யர்பாற் (105)
பொய்மையாய் நின்ருன் புரிந்தவர்தம் நெஞ்சத்து

சூறை	-	சுழல் காற்று
சுழல் வண்டு	-	சுழலுகிற வண்டு
சுழல் கொள்ளி வட்டம்	-	சுழற்றுகிற கொள்ளிக்கட்டை
எனும்	-	என்கிற
மாறு	-	மாறிய பிறப்புக்களை
கருணையினுல்	-	தன் கருணையினுல்
மாற்றினுன்	-	(அடியேனுக்கு இனி) இல்லையாக்கினவன்;
நீறு அணிந்த மெய்யன்	-	திருநீறு உத்தூளித்த திருமேனியையுடையவன்;
நிமலன்	-	மலமற்றவன்
அமலன்	-	மாயை கன்ம மில்லாதவன்
அருள்	-	அருள் மேலிட்டு
வீடு அளிக்கும்	-	முத்தியைத் தரும்
ஐயன்	-	கர்த்தன்;
அறிவுக்கு	-	அறிகிற உயிரறிவுக்கு
அறிவு	-	அறிவித்து உடனிருந்து அறிகிற அறிவு
ஆயினுன்	-	ஆனவன்
பொய்யர்பால்	-	அஞ்ஞானிகளிடம்
பொய்ம்மை ஆய்	-	இல் பொருள் போல்
நின்ருன்	-	அவரறியாமல் நிற்பவன்;
புரிந்தவர் தம்	-	வழிபடுபவரின்
நெஞ்சத்து	-	உள்ளத்தில்

மெய்ம்மையாய் நின்று விளங்கினுன் - கைமழுவன்
அத்தன்பால் நீசென் றடையு மிடத்தையெலாஞ்
சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கேள் - நித்தலுமே
பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி

மெய்ம்மை ஆய்	-	உள்பொருளாய்
நின்று	-	நிலேத்து
விளங்கினுன்	-	விளங்குகிறவன்;
கைம் மழுவன்	-	கையில் பரசு என்னும் ஆயுதத்தை யேந்தியவன்.
அத்தன் பால்	-	அத்தகைய பெருமானிடத்து
நீ சென்று	-	நீ போய்
அடையும்	-	அடைய வேண்டிய
இடத்தை	-	மெய்யான குறிக்கோளேயும்
எலாம்	-	(இடைப்பட்ட போலிக் குறிக்கோள்கள்) எல்லாவற்றையும்
சித்தம் சேர்	-	சிந்திக்க வல்ல
நெஞ்சமே	-	நெஞ்சே!
செப்ப	-	நான் உனக்குச் சொல்ல
கேள்	-	நீ கவனமாகக் கேட்பாயாக.
நித்தலுமே	-	நாள்தோறும்
பூசி	-	சந்தன களப கஸ்தூரி முதலிய வாசனேத் திரவியங்களேப் பூசி
முடித்து	-	சுகந்த் பூமாலேகளே யணிந்து
உண்டு	-	அறுசுவை நால்வகை உணவை யருந்தி
உடுத்தி	-	பட்டாடை பொன்னுடை முதலியவற்றை அணிந்து
பூ குழலார் தம்	-	பூ முடித்த கூந்தலேயுடைய பெண்களின்
கலவி	-	புணர்ச்சியாகிய

யாசைதனிற் பட்டின்ப வார்கலிக்குள்- நேசமுற
நின்று திளைக்கு மிதுமுத்தி யல்லதுவே
றொன்று திளைக்கு மதுமுத்தி - யன்றென்
றிலகா விருளலகை போலிகலே பேசு
முலகா யதன்பா லுறுதே - பலகாலுந் (110)

ஆசையினில்	-	காமத்தில்
பட்டு	-	அகப்பட்டு
இன்ப	-	சிற்றின்பமாகிய
ஆர்கலிக்குள்	-	கடலில்
நேசம் உற நின்று	-	அழுந்திக் கிடந்து
திளைக்கும் இது	-	அநுபவிக்கிற இதுவே
முத்தி அல்லது	-	பிரத்தியட்சமான முத்தியாவதல்லது
வேறு	-	இதற்கு வேறான
ஒன்று	-	(உயிர்) சிவத்தை
திளைக்கும் அது	-	அநுபவிப்பதாகிய அப்பிரத்தியட்சமான ஒன்று
முத்தி அன்று என்று	-	முத்தி எனப்படாது என்று
இலகா	-	எந்தத் தீபத்தாலும் விலகாத
இருள்	-	இருள் போன்ற அறியாமையையுடையவனாய்
அலகை போல்	-	பேய் போல
இகலே	-	விபரீதமே
பேசும்	-	பேசித் திரிகிற
உலகாயதன் பால்	-	சார்வாகனைக் கண்டு அவனிடம்
உறுதே	-	நெருங்கி விடாதே.
பல காலும்	-	பல தடவையும்

தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
நான்பிரம மென்பவர்பால் நண்ணுதே - ஊன் றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்று குறித்
தென்றுமற மேதெய்வ மென்றென்றும் - வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொல்

தாம் பிரமம் கண்டவர் போல்	-	தன்னையுந் தலைவனையுங் கண்ட உண்மைச் சீவன் முத்தர் போல
தம்மை	-	கருவிகளின் நீக்கத்தில் உயிராகிய தன்னை
கண்டு	-	கண்டு (அதனால் கருவி வாயிலாய் வரும் இன்பத்தினும் சற்று மேலான இன்பத்தை யனுபவித்து)
ஆங்கு	-	அந்நிலையில்
அதுவே	-	அவ்வுயிராகிய
நான் பிரமம் என்பவர் பால்	-	நானே கடவுள் என்கிற மாயாவாதிகளிடம்
நண்ணுதே	-	நெருங்காதே.
ஊன் தனக்கு	-	உடலை வளர்த்தற்கு
கொன்றிடுவதெல்லாம்	-	பிராணிகளைக் கொல்வதெல்லாம்
கொலை அல்ல என்று	-	கொலையாகாதென்று
குறித்து	-	பிறர்க்கு உபதேசித்தும்
என்றும்	-	எப்போதும்
அறமே	-	புண்ணியமே
தெய்வம் என்று	-	தெய்வம் என்றும்
என்றும்	-	நித்தியமான
வென்றி	-	முத்தியாவது
பொறையே எனும்	-	(நட்பு பகையென விருப்பு வெறுப்பு இல்லாம லிருப்பதே யாம்) என்கிற
புத்தன்	-	புத்தனுடைய
பொல்லாத	-	பாவத்துக் கேதுவான
புன் சொல்	-	கீழ்த்தரமான வார்த்தையாகிற

மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி
வாழ்பவர்போல் மன்னுடம்பின் மன்னும் உரோ மம்பறித்துத்
தாழ்வுநினை யாதுதுகி ருனகற்றி - யாழ்விக்கு
மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுரைக்கும்
வஞ்சமணன் பாழி மருவாதே - செஞ்சொற்புனை (115)

மிறையே	-	குற்றத்தை
விரும்பி	-	விரும்பி
விழாதே	-	தடுமாறுதே.
நிறை	-	(எவ்வுயிர்க்கும்) நடுநிலை
மேவி	-	பொருந்தி
வாழ்பவர் போல்	-	சீவகாருணிய முடையவர் போலிருந்து
மன் உடம்பில்	-	நெடுங்காலமாய் வைத்துப் போற்ற வேண்டிய உடம்பில்
மண்ணும்	-	பொருந்திய
உரோமம்	-	மயிரெல்லாம்
பறித்து	-	பிடுங்கி
தாழ்வு நினையாது	-	அவமானத்தைக் கருதாமல்
துகில்தான்	-	துணியை
அகற்றி	-	களைந்து
ஆழ்விக்கும்	-	பிறப்பில் செலுத்துகிற
அஞ்சு	-	உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் பஞ்ச கந்தமும்
அகற்றும் அது	-	கெட இருப்பதாகிய அந்நிலையே
முத்தி என்று உரைக்கும்	-	முத்தி எனக் கூறுகிற
வஞ்ச அமணன்	-	பொல்லாத சமணனுடைய
பாழி	-	கூட்டத்திற் போய்
மருவாதே	-	அகப்பட்டுக் கொள்ளாதே.
செஞ்சொல் புனை	-	சத்திய வாசகம் நிறைந்த

யாதிமறை யோதி யதன்பயனொன் றும்மறியா
வேதியர்சொல் மெய்யன்று மேவாதே - யாதியின்மேல்
உற்றதிரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர்

ஆதி மறை	-	பழைமையான வேதத்தை
ஓதி	-	அப்பியசித்தும்
அதன் பயன் ஒன்றும்	-	அவ்வேதப் பயனைச் சிறிதும்
அறியா	-	அறிய மாட்டாத
வேதியர்	-	வைதிகராகிய பாட்டன் பிரபாகரன் முதலியோரின்
சொல்	-	கர்மம் பிரமம், ஆன்மா பிரமம் என்பனவாதிய தீய போதனைகளை (உபதேசங்களை)
மெய் என்று	-	சத்திய மென்று
மேவாதே	-	அவர் பக்கல் சார்ந்து விடாதே.
ஆதியின் மேல்	-	ஆதி பகவனாகிய சங்கரன் றன் திருமேனியில்
உற்ற	-	அணிதற்குரிய பெருமை வாய்ந்த
திரு நீறும்	-	திரு நீற்றை
சிவாலயமும்	-	சிவபிரான் எழுந்தருளியிருக்கிற கோவில்களை (முறையே) பக்தியால் அணிதலையும் வணங்குதலையும் விட்டு
உள்ளத்து	-	மனதில்
செற்ற	-	தூஷித்துத் திரிகிற
புலையர் பால்	-	கர்ம சண்டாளரிடம்
செல்லாதே	-	நெருங்காதே.
நல் தவம் சேர்	-	நல்ல நேயம் நிறைந்தவரின்

வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே - நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே - விழித்தருளைத்

வேடமுடன்	-	திருவேடத்தையும்
பூசை	-	அந்தரியாக மாகிய பூசையையும்
அருள்	-	அருள் வழி நிற்றலையும்
மெய்ஞ்ஞானம்	-	சத்திய ஞானந் தலைப்படுதலையும்
இல்லாத	-	இல்லாத
மூடருடன் கூடி	-	மூடர்களைச் சந்தித்து
முயங்காதே	-	அவர்களைக் கலந்து கொள்ளாதே.
நீட	-	அநாதியாகவே (உலகை)
அழித்து	-	சங்கரித்து
பிறப்(பிப்) பது	-	தோற்றி (நிறுத்தி) வருங் கிருத்தியங்களின் இயல்பை
அறியாது	-	அறியாமல்
அரனை	-	அக் கிருத்திய கர்த்தாவாகிய சிவனை
பழித்துத் திரிபவரை	-	நிந்திக்கிற நாடோடிகளை
பாராதே	-	கண்ணாலும் பாராதே. (அடியேனுக்கு நிர்வாண தீக்ஷை செய்த போது அத்துவ சோதனை செய்து நாயேன் செய்வினையுங் கைக் கொண்டு)
விழித்து	-	திருநோக்கம் பாலித்து
அருளைத் தந்து	-	(நாயேனைப் புறம்போக வொட்டாது) தன் அருளில் இருத்தி

தந்தெம்மை யாண்டருளுஞ் சம்பந்த மாமுனிவ

னந்தங் கடந்தப்பா லாய்நின்ற - னெந்தைபிரான் (120)

வீற்றிருக்கு மோலக்க மெய்தியடி வீழ்ந்திறைஞ்சிப்

எம்மை	-	நாயேனை யடிமையெனவும் தன்னை ஆண்டவனெனவும் காட்டி
ஆண்டருளும்	-	அந்நிலையில் நாயேனை யடிமை கொண்டருளிய

(திருவடி நீழலில் இரண்டறப் புணர்த்திய)

சம்பந்த மாமுனிவன்	-	மறைஞான சம்பந்த சிவாசாரியனாய் வந்த சிவபிரான்
அந்தம் கடந்து	-	(சர்வ சமய) முடிபுகளையுங் கடந்து
அப்பால் ஆய்	-	(வேதாகமமாதி அளவைகளுங்) கடந்து
நின்றான்	-	(அறிவுக்கறிவாய்) நின்றான்.

(அது குருவிருக்கும் இரகசிய இடம் ஏகாந்த ஸ்தானம் ஓங்காரத்துட்பொருள்)

எந்தை பிரான்	-	சர்வான்மாக்களுக்கும் பிதாவாகிய அப்பெருமான்
வீற்றிருக்கும்	-	எழுந்தருளியிருக்கிற
ஓலக்கம்	-	அவ்வேகாந்த ஸ்தானத்தில்
எய்தி	-	நீ (பயபக்தியுடன் கைகட்டி வாய்புதைத்து முன்தானை யொதுக்கிப் பையப்பையச்) சென்று (இடப்பக்கத்தில் ஓவியம் போல் நில்) அப்போது அவன் கிருபையுடன் உன்னைத் திரும்பி நோக்குவான். அவன் திருமுகத்தில் அருள் பொங்கியெழும். அப்போது உன் உள்ளும் புறமும் ஒத்து
அடி வீழ்ந்து	-	அவன் திருவடியில் அட்டாங்க பஞ்சாங்க திரிவிதாங்க, த்வயாங்க ஏகாங்கமாக உள்ளம் நெகிழ உரை குழற உணர்வு அவிழத் தண்டனிட்டு என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்று
இறைஞ்சி	-	வணங்கி

போற்றி சயசய போற்றியென- வார்த்தகரி
யன்றுரித்தாய் நின்பவனி யாதரித்தா ரெல்லாரும்
வென்றிமத னம்புபட வீழ்வரோ - என்றும்

போற்றி சய சய போற்றி என	-	போற்றி சய சய போற்றி என்று துதித்து

(விண்ணப்பம் செய்.)

ஆர்த்தகரி	-	தாருவன ரிஷிகள் அனுப்பி ஆரவாரத்தோடு வந்த யானையை
அன்று	-	அப்போதே
உரித்தாய்	-	கொன்று அதன் தோலை உரித்தவனே!
நின் பவனி	-	நீ கோலாகலமாய்ப் பவனி வருவதை
ஆதரித்தார்	-	தேவர்கள் பூமழை பொழியப் பொன்மழை பொழியத் தேவ துந்துபி முழங்க திரிலோகத்தாரும் அடியார்களும் தோத்திரஞ் செய்து தொழுது பேரானந்தப் பெருவெள்ளத் தழுந்தித் தேக்கிட்டுப் பரவசராகியிருந்தவர்கள்
எல்லாரும்	-	அனைவரும்
வென்றி	-	பிறரையெல்லாம் வசப்படுத்தவல்ல
மதன்	-	மன்மதன் எய்யும்
அம்பு பட	-	அம்பு படுவதனுல்
வீழ்வரோ	-	மயங்குவார்களோ?
என்றும்	-	எக்காலத்தும்

நில்லாது செல்வம் நிலையென் றுனைநீங்கிப்
பொல்லா நரகிற் புகுவரோ - பல்லோருங்
கத்துஞ் சமயக் கணக்கிற் படுவரோ
சித்தம் பலகால் திகைப்பரோ - முத்தம்
பொருத நகைமடவார் புணர்கலவி யின்பம்

நில்லாத	-	நிலையற்ற
செல்வம்	-	பிரம விஷ்ணுவாதி யோரின் மதங்களும்
(அவற்றை)		
நிலை என்று	-	சாசுவிதமெனக் கருதி
உனை	-	சாசுவிதமான உன் திருவடியின்பத்துக்கு
நீங்கி	-	அயலாகி
பொல்லா	-	பெருந்துன்பம் விளைக்கும்
நரகில்	-	எல்லா நரகங்களிலும்
புகுவரோ	-	புக்கு உழல்வதற்கேதுவான தீவினைகளைச் செய்வார்களோ?
பல்லோரும்	-	பலர்
கத்தும்	-	உண்மையெனக் கதறுகிற
சமயக் கணக்கில்	-	பர சமயங்களை
படுவரோ	-	பற்றிக் கெடுவாரோ?
சித்தம்	-	மனம்
பலகால் (கலங்கி)	-	உண்மையாவது இதுவோ அதுவோ எனக் கலங்கி
திகைப்பாரோ	-	தடுமாறுவார்களோ?
முத்தம் பொருத	-	முத்துப் போன்ற
நகை மடவார்	-	பல்வரிசையை யுடையாரை
புணர்	-	புணர்வதால் கிடைக்கும்
கலவி இன்பம்	-	கலவிச் சிற்றின்பத்தை

மருவி மயங்கி வருவரோ - விருபொழுது (125)
நாளிருபத் தேழு நவக்கிரக முநலியுங்
கோளிதுவென் றெண்ணிக் குறிப்பரோ - வேளை
யெரித்த விழியாய்நின் னின்பக் கடற்கே
தரித்து மதிமறந்த தையல் - வருத்தமெலாந்

மருவி - விரும்பி
மயங்கி வருவரோ - புத்தி கெட்டலைவாரோ?
இரு பொழுதும் - இரவும் பகலும்
நாள் இருபத்தேழும் - 27 நட்சத்திரங்களும்
நவக்கிரகமும் - நவக்கிரகங்களும்
நலியும் கோள் - வருத்தும் பொருள்
இது என்று - இது சுகந்தரும் பொருள் என்று
எண்ணி - நினைத்து
குறிப்பரோ - கணக்கிடுவார்களோ?
வேளை - மன்மதனை
எரித்த - சாம்பராக்கிய
விழியாய் - நெற்றிக் கண்ணுடையவனே!
நின் இன்பக் கடற்கே - உன் பேரானந்தப் பெருங்கடலுக்கே
தரித்து - பொறுத்திருந்து
மதிமறந்த - அறிவிழந்த
தையல் - இப்பெண்
வருத்தம் எலாம் - இதுவரை யடைந்து வந்த துன்பத்தை யெல்லாம்

தீரா யெனவுரைத்துச் செங்கமலப் பூந்திருத்தாள்
தாரா யெனப்பலகாற் றாழ்ந்திறைஞ்சி - ஏராரும்
பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
ஈங்கொன்ற வாராய் இனி. (129)

தீராய் என	-	தீர்த்தருள்வா யென்று
உரைத்து	-	குருபரன்பாற் சொல்லி
செங்கமலப் பூ	-	செந்தாமரைப் பூப்போன்ற
திருத்தாள்	-	திருவடியை
தாராய் என	-	தந்தருள்க என்று
பலகால்	-	பலமுறை
தாழ்ந்து	-	பணிந்து
இறைஞ்சி	-	தண்டனிட்டு வணங்கி
ஏர் ஆரும்	-	அழகு பொருந்திய சிவகந்தம் பரந்து நாறுகின்ற
பூங்கொன்றை	-	மெல்லிய கொன்றை மாலையை
வாங்கி	-	பெற்று
புகழ்ந்து	-	துதித்து
புரி நெஞ்சமே	-	அன்புமிக்க நெஞ்சமே!
ஈங்கு	-	இவ்விடத்து
ஒன்ற	-	என்னிடம் பொருந்தும்படி
வாராய் இனி	-	இனி வந்து சேர்வாயாக.

நெஞ்சு விடு தூது பதவுரை முற்றிற்று.

ஸ்ரீமெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க!
ஸ்ரீ உமாபதி சிவம் திருவடி வாழ்க!

திருச்சிற்றம்பலம்.
JAI BHARATH !!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கண்ணீர் அஞ்சலி

சைவ சித்தாந்தப் பேரொளி

சித்தாந்த சைவ நன்மணி

சிவஸ்ரீ. சு. இரத்நவேலன் அவர்கள்

சிவப்பேறு அடைந்ததை முன்னிட்டு

10.11.2001 அன்று திருநெல்வேலி நகர் தெற்கு மடத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் புலம்பிய

இரங்கற் பா

சித்தாந்த நன்மணியே சீராசை ரத்தினமே
பத்தரையாம் மாற்றுப் பசும்பொன்னே- இந்தரையில்
பட்டொளிரும் முத்தே பவளமே நீயெம்மை
விட்டுப் பிரிந்த தேனே விரைந்து.

சீராசைத் திருநகரில் தோன்றி என்றும்
சிவப்பணிக்கே நாள்முழுதும் செயலு மாற்றி
ஊரெல்லாம் சிவம்பெருக வேண்டும் என்று
உறுதிபட உழைத்திட்டு உயர்ந்த தேவே!
சீரான சிங்கையொடு நெல்லை கோவில்
சீர்பட்டி கழுகுமலை சென்றங் கெல்லாம்
ஆராத அன்பினொடு அடியார் தம்மை
அருகமர்த்தி அறவுரைகள் அளித்த தேவே!!

புறச்சமயம் ஒருபக்கம் புயல்போல் தாக்கும்
புன்மயக்கத் தனித்தமிழோ புழுதி தூற்றும்
'அரனரிக்குப் பேதமில்லை இரண்டும் ஒன்றே'
அறியாத கருத்துடையோர் ஆர்ப்ப ரிப்பர்
முரணுன பலகொள்கை உடையார் தம்மை
மூடிநின்ற மயக்கத்தை அறுத் தெறிந்து
'பரமசிவனே பரமபதி' அரனே என்றும்
பற்றிநிற்ப தொன்றேநம் கடமை என்றார்.

இரத்தினத்தின் வேலனவர் முன்னர் செய்த
இணையற்ற தவப்பயனால் குருவாய் வந்தார்
அரனடிக்கே அடிமைபூண்டு வாழ்ந்து நின்ற
ஆயீசுர மூர்த்தியாம் பிள்ளை நல்லார்
மருள்நீக்கும் குருவாக மலர்ந்து நின்ற
மாசில்லா மூர்த்திபதம் தொழுது பற்றி
குருவாகக் கொண்டுயர்ந்தார் வேல னவர்;
குருவருளும் திருவருளும் கூடப் பெற்றார்.

பதிநான்கு சித்தாந்த சாத்தி ரங்கள்
பாடியத்துள் தலைசிறந்த பாடி யமாம்
துதிசெய்யும் திராவிடமா பாடி யமும்
துணையாக நிற்கும்பல புராண மெல்லாம்
பதித்திட்டார் வேலனவர் நெஞ்சி னுள்ளே
பாத்திகட்டி உரமிட்டுப் பயிர் வளர்த்தார்
பதியொருவன் சிவனவனே உயிர்க்கு எல்லாம்
பாசநீக்கம் அவனால்தான் முடியும் என்றார்.

ஈசுரனும் மூர்த்தியெனும் பிள்ளை பெற்ற
இணையற்ற மாணாக்கர் பலரி னுள்ளும்
வீசிநிற்கும் முழுநிலவாய் வித்த கனாய்
விளங்கியவர் ரத்தினம்நம் வேலன் அன்றோ!
தேசுபுகழ் சைவராஜ தானி யமாம்
திருவா வடுதுறையின் திரும டமும்
ஆசியுடன் சித்தாந்த சைவ நன்மணி
அருள்பட்டம் வழங்கியதும் அவருக் கன்றோ!!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயிற் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்னும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா யென்றென்றே அலறா நில்லே.

- தேவாரம்.

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைந்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புஉடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி.

- திருவாசகம்.

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாறத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருட்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

- திருவிசைப்பா.

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்தும் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

- திருப்பல்லாண்டு.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

- பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்



Sri Gomathi Screen, © 04636 - 424198